# சமூகப் பாதுகாப்புத் திட்டம் மலரும்



மாவட்ட ஆட்சியாளர் —
காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டில் சூலை 27 ஆம் நாளன்று
முதல்வர் கலைஞர்
ஆற்றிய உரை

மலர் 5 இதழ் 3 **தமிழரசு** 1-8-1974

மேதகு ஆளுநர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! காவல்துறைத் தலைமை அதிகாரி அவர்களே! மாவட்ட ஆட்சித்தலைவர்களே! மாவட்டக் காவல்துறை அதிகாரிகளே! ஏனைய அரசு அதிகாரிகளே!

இன்று தொடங்கி நடைபெறும் இந்த சிறப்புமிக்க மாநாட்டில் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, தமிழகத்தின் பொருளாதார வளம், மனவளம், அறிவு, அமைதி, இவற்றைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் முடிவுகள் மேற்கொள்வதிலும் நான் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைகிறேன்.

மக்களாட்சி முறையில் அரசோச்சும் கட்சிகள் மாறிமாறி வரக்கூடும் என்றாலும், உருவாகிய அரசு, மக்களின்

AUG 1974

தேவைகளை உணர்ந்து செயல்படவும்,
வெற்றிக்குரிய வழியை அமைத்திட — சமத்துவ
சமுதாயத்தை அமைப்பதில் கண்ணும்
கருத்துமாக இருக்கவும் — இத்தனைக்கும்
உழைப்பும் மக்களின் ஒத்துழைப்புமே முயற்சியின்
வெற்றி பெறவும் — சமூகப் பாதுகாப்பு —
தொழிலாளர் நலன் — மாணவர் நல்வாழ்வு —
கிராம வளர்ச்சி கிராமத்துடன் திட்டங்களை நடை
முறைப்படுத்தவும் — நாடு, மொழி, கல்வி,
இலக்கியம், வரலாறு, கலை, இவைகளைத்
தலைமேல் காத்து நிற்கவும் — [illegible]
களை வகுத்துக் கொண்டு, திட்டங்களை
நடைமுறைப்படுத்தும்போது, அவைகளை
கட்டிப் பொறுப்பில் இருப்போர் கண்டிப்புடன்
தக்கவண்ணம் நிறைவேற்றிக் காட்டுவது
பொறுப்பில் துணிவது, அண்ணாவின் கனவு

அத்தனைக்கும், நல்லவைகளைச் செய்திட
திட்டங்களும் திட்டமிட்டபோது அவைகளைப்
புரிந்து நம்பிக்கைக்குரியவர்களாகப்
பணியாற்றும் தகுதி பெரிய பொறுப்புக்களை
வகிக்கும் அதிகாரிகள் எல்லாம் இங்கே
கூடியிருக்கிறீர்கள்.

தேவைக்கேற்ப என்னும் அறி
வுரை தோரணையில் இல்லாமல் தேவை
உணர்வுடன் நான் உங்களிடம் பழகி வருகி
றேன். நம் இச்சாதனைகளைப் பற்றி நின்று
தேவை உணர்ந்து, கருத்துக்களை விவாத
மேடையில் வைத்து சரியானதும், பயனுள்ள
மக்களுக்கான முடிவுகள் எடுப்பதற்கென்
றே [illegible] கூட்டமாக இருக்கிறது.

“ நடந்தால் பொதுப்பட்டது நட்டம்
மடத்தனம்
மேன்மேலும் சிறந்து பொலிவுறட்டும் ”

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்ற பொய்யாமொழியை இப்போது நினைவுபடுத்துவது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும். கலவரங்கள் தோன்றாமலே பாதுகாப்பாகக் கண்காணித்தல் – மீறித் தோன்றி விடுமேயானால் அதற்குப் பொறுப்பானவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்தல் – என்ற கொள்கையில் இந்த அரசு நடைபோட்டு வருகிறது என்பதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்களைக் கூற முடியும். அதற்கு உறுதுணையாக இருக்கின்ற அரசு அதிகாரிகள் அனைவரையும் நான் மிகப் பாராட்டுகின்றேன்.

சிற்றூர், வரப்பெடுத்த வயல், இருந்தேக்கிய நல்வாய்க்கால், நெஞ்சோர உழுது உழுது பயன் விளைக்கும் நின்று உழைப்புத் தோள்கள் – இவைகள் நம் கவனத்தில் நீங்காமல் இருப்பதால் தான் நமது திட்டங்கள் மிகப்பெரும் பான்மையான கிராமங்களை நோக்கிச் செல்கின்றன.

இந்த ஐந்தாண்டு காலத்தில் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்காக வகுக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை திட்டங்கள் – இந்தியாவில் எங்குமில்லாத அளவுக்கு இயற்றப்பட்டுள்ள மின்விசைக் குழாய்க் கிணறுகள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்னொளி – கடந்த இரண்டு ஆண்டுகளில் எழுபதாயிரம் மேல் எல்லாத் தெருக்களிலும் மின்னொளி – இவைகள் எல்லாம் கிராமங்களுக்குக் கிடைத்த நலன்கள்.

உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப் பெற்று, நாட்டிலேயே திட்டமான நேர்த்தி வரலாற்றின் அடிப்படையில் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றங்

இன்னும் பகுதிகளில் கூட பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மிக வேகமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் ஒரு சில ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் முழுமை பெற்றிட நாம் மேலும் முனைப்புடன் பணியாற்றிட வேண்டும்.

இந்தியாவில் நமது மாநிலத்தில் மட்டும் நேர்த்தியுடன் சீராக செயல்பட்டு வருகிற "மதுவிலக்குத் திட்டத்தின்" பயன்களை உடனுக்குடன் கிராமமக்கள் பெறுகின்றனர் என்றும், இதனை மேலும் விரிவுபடுத்த உங்களிடமிருந்து கருத்துக்கள் எதிர்பார்க்கிறேன்.

கிராமத்து ஏழை மக்கள் கொண்ட கிராமங்கள், முந்திய காலங்களுடன் ஒப்பிடும் போது தரமான சாலைகள் அமைக்கும் திட்டத்தை அரசு இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறோம். இதற்கும் மேலாகச் சிறிய கிராமங்களையும் முக்கிய சாலைகளுடன் இணைக்கும் சாலைகள் அமைக்கவும், இந்த ஆண்டு ஒரு தொகுப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இதுபற்றிய முழுதகவல் இணைச்சாலைத் திட்டச் செயலகம் அருகில் எடுக்கப்பட்டுள்ளன. இவைகளைச் சீரிய முறையில் செம்மையாகச் செய்து முடிக்கும் பணியில் அதிகாரிகள், அயராது பாடுபடவேண்டும். அதற்கு நிதியும் பெரிது இத்துறை ஆண்டுக்காலத்தில் இருந்தவரைத் தச் செல்ல இடைப்பட்ட பாதை கூட இல்லாமல் இன்னமும் இருக்கிறதே என்று கூறப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் இவைகளை எல்லா அரசியல் கட்சிகளும் எதிரொலித் திருத்தவில்லை. இத்தகைய பாதைகளை அமைக்க ஒரு தொகுப்புத் திட்டம், கிராமச் சாலைகள் போடும் திட்டத்தோடு இணைக்கப் பெற்று, இதன் விபரங்களை நாளும், இணைப்புகளும், அதிகாரிகளுடன் கலந்து பேசியுள்ளோம்.

இந்தப் பணியை விரைவாக முடிக்கும் பொறுப்பை அவரிடம் பகிர்ந்து கொண்டு செயல்பட வேண்டுகிறேன். இதற்கான திட்டங்களைப் படித்தல் போன்ற காரியங்களில் அந்தந்த ஊர்மக்களின் ஒத்துழைப்பை அதிகாரிகள் பெற்றிட வேண்டும்.

ஏரிகள், குளங்கள், போன்ற பாசன அமைப்புகள் எதையும் விடுக்காமல் அனைத்தையும் சீர்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்றுக்காகவும் இந்த ஆண்டு தனித் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பயன்களை ஆங்காங்கே அளவிலே நிறைந்த ஆயக்கட்டுக்காரர்களும் அடைந்திடலாம். இந்தச் செம்மையாகச் சேதமும் இல்லாமல் பழுதுபார்க்கச் செய்து முடிக்கும் காரியத்தைத் தங்கள் கடமையெனக் கொண்டிட வேண்டுமென அந்தத் துறைத் தொடர்புடைய அதிகாரிகள் அனைவருக்கும் கூறிக் கொள்கிறேன்.

இந்தியாவில் வேறு எங்கும் அறிமுகப்படுத்தப் படாத மிகப் புதுமையான திட்டமாக "அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்" "சமூகப் பாதுகாப்புத் திட்டம்" ஆகிய இரு திட்டங்களை நமது அரசு, அறிமுகப்படுத்தி – இருவகைக் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியும் நடத்தி வருகிறது. அலுவலர்க்கும் தங்கள் குடும்பத்தின் ஆதாரத் தூண்களை இயற்கையிடம் பறிகொடுத்துவிட்டு, திக்கற்றுப் போன தாய்மார்கள் இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பத்தாயிரம் ரூபாயைப் பெறும் போது, உழைக்கும் நமக்கும் வாய்த்திட்ட அரசுக்கும் எவ்வளவு மன ஆறுதல் கிடைக்கிறது என்பதை உணர முடிகிறது.

திறன், இவர்கள், இலக்கியங்கள் போன்றவை பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் அதிகாரி களுக்கு இருக்கிறது.

அதுவுமட்டுமின்றி, வீடுமின்று இல்லா மக்களும் ஏ. டெக் காரய "அகேப் பாதுகாப்புத் திட்டம்" விரைவில் மலர இருக்கிறது. அதன் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

உடல் உழைப்புக்கேற்ற மிகப் பெரிய அளவில் நாம் தொடங்கியுள்ள கூட்டுறவுத் திட்டமும், தொழிற்பட்ட மக்களுக்குத் தனி வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டுவது மகத்தான திட்டமும், வெற்றிகரமாக முன்னேற உங்கள் அனைவரின் ஆர்வமான ஒத்துழைப்பை நான் வரவேற்கக் காத்திருக்கிறேன்.

அன்றியும் மாநிலங்களில் மதுக் கடைகள் திறக்கப்படுவதாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தொல்லை கட்டுப் படுத்தப்படாததாலும், நம் மதுக்கடை அதைத் திரும்பக் கொண்டு வரவும் வேண்டும் என்ற, காந்தி போன்ற இடங்களில் ஏற்பட்ட அனுபவ நிலைமைகளால் நேர்ந்த தொடர்களைக் கருத்தில் கொண்டதா லும், தமிழகத்தில் மது விலக்கில் தொடர்ந்து வெற்றி பெறுதல் போனது மட்டுமல்ல; அரசாங்கத் தின் நிதியாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட் டதனால், 1971 ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்திவைத்தோம். அதனை அரசின் நிதி யாதாரம் திருப்திகரமாக சீர்பெற்று, நிறைவேற்ற என்று இருந்தபோதிலும் நம்பிக்கையும் வருகிறது.

ஆயினும், அண்ணல் காந்தி தொடர்ந்து
அண்ணா வழியில் அரசோச்சும் நமக்கு,
மதுவிலக்கு ஒத்திவைப்பின் நியாயம்
கருத்துக்கிடையே, லேசான ஒரு முள்
போல் உறுத்திக் கொண்டேயிருந்தது
இதை, மதுவிலக்கை ஒத்திவைத்த போதே
சட்டப் பேரவையில் நான் குறிப்பிட்டிருக்கி
றேன்.

அதன் முடிவாக, அண்ணா பிறந்த செப்டம்பர்
திங்கள் முதல் மீண்டும் பூரணமான
மதுவிலக்குக் கொள்கை நடைமுறைக்கு
வருகிறது.

அதன் விளைவாக, பழைய நிலைகள்
மீண்டும் தலைதூக்கும் என்பது நமக்கு
நன்றாகத் தெரியும்.

காய்ச்சுவோர், குடிப்போர், என்றெல்லாம்
சமூக விரோதிகள் தோன்றுவர். இவர்களை
இருப்போர், தூண்டுவோர், மறைமுகமாக
உதவிபுரிவோர், மாமூல் காசு என்றெல்
லாம் பட்டியல் தொடர்கிறது. தீவிர நட
வடிக்கை உடன் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி
அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும்
தயக்கம் காட்டக் கூடாது. அதுபற்றியும்
இந்த மாநாட்டில் நாம் கருத்துக்கள் வழங்
கிட வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கையால்
அரசுக்கு ஏற்படும் இழப்பைப் பல
முனைகளில் ஈடுகட்ட வேண்டியவர்களாக
இருக்கிறோம். இதில் ஒரு முனையாக

நாம் இப்போது கடைப்பிடிக்கும் கொள்கை
முறையை மேலும் தீவிரமாகக் கடைப்
பிடிக்க அவசியம் ஏற்படுமாக
வேண்டும்.

திட்டங்கள், அவைகளின் அமைப்புகள்
அடைய — இரண்டாவது திட்டம் இன்றியமை
யாது என்றோம்.

மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும்
திட்டங்களுக்குப் பெருந்துணையாகும்.

கடமை புரியும் மனவமைதியும்
அவசியம் பெறுவதே ஒரு நாட்டின்
அவசரத் தேவையாகும்.

இந்த வகை பெற்று, நமது
மாநிலம் முன்னேற்ற நாம் பெறு
விரும்பிய பெருக்கத்தில் இன்னும் நாடும்
அதிகாரிகள், ஊழியர்கள் என்று
எதிர்பார்ப்புடனும், இங்கு நாம் எடுக்கும்
முயற்சியில் மனமார ஒத்துழைப்புத் தருவர்
என்னும் நம்பிக்கையுடனும் என் உரையை
முடிப்பதோடு, நமது அன்புக்குரிய உப
திருநாட்டு முன்னேற்றத்திற்கு அக்கறை
உடையவர்களான மேதகு அதிகாரி அவர்கள்
இந்த மாநாட்டைத் தொடங்கி வைக்குமாறு
கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

28 AUG 1974

# ஊரக வளர்ச்சித் திட்டங்களை மேலும் தீவிரமாக நிறைவேற்றுவதற்கான விளக்க ஆணைகள் :

ஊரக ஒன்றியங்கள், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை மட்டுமல்லாமல், வட்டார அளவிலும், அதற்குக் கீழேயும் செயற்படுத்த இயலக்கூடிய ஏனைய வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. நடைமுறையில் கொண்டுவரப்பட்ட முக்கியமான மாற்றம் என்னவெனில், ஊராட்சி வளர்ச்சிக்கான திட்டவாரி வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதாகும். இதன் மூலம் ஊர் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய நிதிகள் தொகுக்கப்பெற்று, அவற்றைப் பயன்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய திட்டவாரி வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதன் காரணமாக, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரமும், தனக்கு ஐந்தாண்டு காலத்துக்குக் கிடைக்கக்கூடிய மொத்த நிதி ஒதுக்கீடு, அதனிடம் ஒப்படைக்கப்படுகின்ற வருவாயில் கிடைக்கக்கூடிய வரவினங்கள், வளர்ச்சித் திட்டத்துக்காக அரசு மானியங்களாக எவ்வளவு எதிர்பார்க்கலாம், தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எந்த அளவுக்கு தான் நிதியை திரட்ட வேண்டியிருக்கும் என்பதையெல்லாம் தெரிந்துக் கொள்ள உதவுகிறது. ஊராட்சி வளர்ச்சிக்குரிய திட்டவாரியான வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டதற்கு அடிப்படைக் கொள்கை யாதெனில், இதுவரை வளர்ச்சியில் மிக மிகப் பின்தங்கியிருந்த வளர்ச்சி வட்டாரங்கள், விரைந்து வளர்ச்சிபெற வகை செய்வதும், இயன்ற அளவு விரைவில் வளர்ச்சிப் பாங்கில் வட்டாரங்களுக்கிடையே ஏற்படும் வேறுபாடுகளை அகற்றுவதும் ஆகும். இந்த வகையில் கிராம மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களின் வளர்ச்சிக்குப் பொறுப்பேற்றவர்களாக அமைந்த ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கு, தமது வட்டாரத்திற்கென திட்டமிடும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக, ஐந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதோடு மட்டுமல்லாமல், வரவு செலவுத் திட்டத்தை நிர்வகிக்கவும், வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தவும் பொறுப்பு ஏற்கும்.

எனவே ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இங்கு வளர்ச்சித் திட்டமானது தொடர்புடைய எல்லாத் துறைகளின் ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமேயன்றி, தனியொரு திட்டமாக கருதப்படக்கூடாது. ஊராட்சி ஒன்றியங்கள் திட்டமிடுதல்-வளர்ச்சி-இவற்றின் அடிப்படைக் களமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

பல்வேறு துறைத் தலைவர்கள், மாவட்டத்திலுள்ள சார்பு நிலை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளுமாறு உத்திரவுகள் பிறப்பிக்கவேண்டும். அவர்கள், தங்களது நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்தவும், ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து ஆலோசனை செய்தல் வேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு துறைகளும் செயல்படுத்துகின்ற திட்டங்களை, மாவட்ட அளவில், வளர்ச்சித் திட்டங்களின் தலைமைப் பொறுப்பு வகிப்பவர் என்ற அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். பல்வேறு துறைத் தலைவர்களும் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும் போது, தங்கள் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேறி வருகின்றன என்று ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். மேற்சொன்ன அரசாணையை, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் எல்லாருக்கும் அனுப்புமாறு, ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் செயலாளர் அவர்கள் (திரு. எம். எம். ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்.) விரிவாகவும் தெளிவாகவும் வெளியிட்டுள்ள முக்கிய ஆணையின் பயனாக, ஊரகவளர்ச்சித் திட்டங்கள் புதிய ஊக்கத்துடன் நிறைவேற்றப்பெறும் என்றும் ஊராட்சிப் பணிகள் புத்துணர்வுடன் செயல்பெறும் என்றும் எதிர்பார்க்கலாம்.

(தமிழ்நாடு அரசு - ஊரகவளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண். 1410, நாள் : 4—6—1974-ன் சுருக்கம்)



அடையாறிலுள்ள எலெக்ட்ரா
னிக் தொழிற்பேட்டை சென்ற
ஆண்டில் 4,000 கார் ரேடியோக்களை
ஏற்றுமதி செய்தது. இந்தியாவி
லேயே அதிக கார் ரேடியோ ஏற்று
மதி செய்த நிறுவனம் இதுவே.

திருவள்ளூர் அருகில்ஙாக்களூரில்
உள்ள எலெக்ட்ரானிக் தொழிற்
பேட்டை முன்னேறி வருகிறது.
திருச்சி, ஒசூர், சேலம், கோவை
ஆகிய இடங்களிலும் இதேபோன்ற
தொழிற்பேட்டைகள் அமைக்க ஆக்
கப் பணிகள் நடந்து வருகின்றன.



தமிழ்நாடு சிறுதொழில்கள்
கழகத்தின் கீழும், தொழில்
வர்த்தகத்துறை இயக்குநர் கீழும்
பணியாற்றிவரும் பீங்கான்
தொழிற்சாலைகளை எடுத்து நடத்து
வதற்காகத் 'தமிழ்நாடு பீங்கான்
தொழிற் கழகம்' என்ற புதிய
நிறுவனம் ரூ. 2 கோடி மூலதனத்
துடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்
நிறுவனம் 10 பீங்கான் தொழில்
களை ஜூலை 15-ந் தேதி முதல் மேற்
கொள்கிறது.

விருத்தாச்சலம் பீங்கான்
தொழிற்சாலையில் இட்போது ஆண்
டொன்றுக்கு ரூ. 40 இலட்சம் மதிப்
புள்ள பொருள்கள் உற்பத்தியா
கின்றது. இதை ரூ. 60 இலட்சத்
துக்கு உயர்த்துவதென்று தீர்மா
னிக்கப்பட்டிருக்கிறது.



தமிழ்நாட்டில் பெண் போலீஸ்
முதலாவது அணிக்கு அளிக்கப்பட்டு
வரும் பயிற்சியானது இவ்வாண்டு
நவம்பர் மாதத்தில் முடிவடை
கிறது. அதன் பிறகு ஓராண்டுக்
காலம் அவர்கள் நேரடிப் பணியில்
ஈடுபடுத்தப்படுவர். அவர்களுடைய
பணி எந்த அளவில் திறமையாக
நடக்கிறது என்பதைப் பொறுத்து
மதுரை, கோவை, திருச்சி ஆகிய
இடங்களிலும் இதுபோன்ற அணி
கள் ஏற்படுத்தப்படும். வரும்
செப்டம்பர் 14-ந் தேதி மதுரை
நகரில் நடக்க இருக்கும், முதல்வர்
காவலர் பதக்கம் அணி வகுப்பில்,
பெண் போலீஸ் அணியும் கலந்து
கொள்ளும்.





# நன்மைகள் பெருகிடப் புதிய பொறுப்பு

இன்றையதினம் உங்களையெல்லாம் ஒருங்கே இங்கு சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி, மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் சுதந்திரம் பெற்றுத் தனிக் குடித்தனம் அமைப்பதில், எனது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கும் பொருட்டே இங்கு வந்திருக்கிறேன்.

*1958* ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே இந்தத் துறை தனித்து இயங்கினால் நன்மை என்ற கருத்தை வலியுறுத்தி வந்திருப்பவர்களில் நானும் ஒருவன். எனவே நமது கோரிக்கை இன்று நிறைவுபெறுவதைப் பார்க்கும்போது, மகிழ்ச்சி ஏற்படுகிறது.

மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களும், ''பிள்ளைகளுக்கு வயது வந்துவிட்டது; தனிக் குடித்தனம் செய்யவேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. எனவே பிரிந்து இயங்குவது நல்லது'' என்ற உணர்வுடன் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

தனிக்குடித்தனம் தொடங்கினால், பொறுப்பு அதிகமென்பது, அனைவருக்கும் தெரியும். குறை சொல்லப் பலரும் காத்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே, நாம் கவனமுடனும் திறமையோடும் செயலாற்ற வேண்டும். இந்தப் பிரிவுக்குப் பிறகு, நாம் செய்யப் புகும் பணி, ஓர் எடுத்துக் காட்டாக அமையவேண்டும். அப்போதுதான், நமக்குப் பெருமை உண்டு. இதை நினைத்துப் பாடுபட வேண்டும்; பலன் காண வேண்டும்.

கிராமங்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுமானால் நாட்டுக்கு நல்லது. இதையே அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். என்னைக் காணும்போதெல்லாம் அவருக்குக் கிராமங்களின் நினைவுதான் ஏற்படும். என்னைக் கண்டதும் 'கிராமம்' வந்துவிட்டது என்பார்கள். ஏனெனில், நான் கிராமங்களின் . தேவைகளை வாய்ப்பு நேரும்போதெல்லாம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே இருப்பேன். என்னை 'கிராமம்' என்றே அண்ணா அவர்கள் அன்புடன் அழைப்பார்கள்.

இப்போது நமக்குப் புதிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நமது முயற்சியில் கிராம மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றினாலும், பொறுப்பு உள்ளாட்சித் துறையையே சார்ந்ததாகிறது.

கிராமங்களில் குடிநீர், இணைப்புச்சாலைகள், பள்ளிகள், ஆகிய பிரச்சினைகள் இருக்கின்றன, இவற்றை உடனடியாகத் தீர்க்க முயல வேண்டும். இதில் உள்ளாட்சித் துறை முழு வெற்றி பெற வேண்டும்.

இப்போது நமக்குப் புதிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நமது முயற்சியில் கிராம மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும். பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றினாலும்,

'பொறுப்பு உள்ளாட்சித் துறையையே சார்ந்ததாகிறது.

கிராமங்களில் குடிநீர், இணைப்புச் சாலைகள், பள்ளிகள், ஆகிய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை உடனடியாகத் தீர்க்க முயல வேண்டும். இதில் உள்ளாட்சித் துறை முழு வெற்றி பெற வேண்டும்.

கிராமங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கும் அதிகாரம் தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அளிக்கப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதலை எதிர்பார்க்காமல், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இனி திட்டங்களுக்கு அனுமதி வழங்குவார்கள். இதுவரை ஊராட்சிகளுக்கு ஒரே அளவான இணை மானியங்கள் வழங்கப்பட்டன. இனி அவ்வாறில்லாமல், ஊராட்சிகளின் தேவைகளுக்கேற்ப மானியங்கள் அளிக்கப்படும். தங்களிடமுள்ள நிதிகளை, ஊராட்சிகளே ஆக்கப்பணித் திட்டங்களுக்குச் செலவழித்துக் கொள்ள இதனால், புது வழி வகுக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறைக்கு எல்லா வகையிலும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருக்கிறது. ஊரக வளர்ச்சித்துறையும் அதனளவுக்கு வளர வேண்டும். இப்பொழுது பதவியுயர்வு பெற்று, புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், பழைய நினைவுகள் வரும்போது கடந்த கால நிலைக்கும் போய்விடக்கூடாது. இதனால் நிர்வாகச் சீர்கேடும், வேலைகளில் தாமதங்களும் ஏற்பட ஏதுவாகலாம். நமது நிர்வாகத் திறன் வருங்காலத்தில் வருபவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும். கண்டிப்பு இருக்க வேண்டியது மிக முக்கியம். நாம்,

மக்களுக்குச் சேவை செய்வதற்கே பொறுப்பேற்றிருக்கிறோம்!

இத்துறையின் எதிர்காலம் நீங்கள் எப்படிப் பணியாற்றுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஊர் வளர்ந்தால் நாம் வளர்வோம். ''ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்'' என்ற பழமொழி நினைவில் கொள்ளத்தக்கது.

இப்போது, நிர்வாகத்துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், மக்களுக்கு அதிகமாகத் தெரியாது. இலாகா பிரிவின் விளைவு நாம் வேலை செய்யும்போதுதான் எல்லாருக்கும் தெரிய முடியும்.

டார்கள். இப்போது அதற்கெனவே, நாம் இருக்கிறோம். இதை உணர்ந்து உற்சாகமாகப் பாடுபடுங்கள். உள்ளாட்சித் துறை, வருவாய்த்துறையிலிருந்து பிரிந்த பிறகு சிறந்த முறையில் பணியாற்றுகிறதென்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

சூலை முதல் தேதி, முகூர்த்த நாள் என்கிறார்கள். எனவே, நல்ல புனிதமான நாளில் புதுப் பொறுப்பு ஏற்கிறீர்கள். நல்ல முறையில் வேலை செய்து, நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களை வாழ்த்தி நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**[ஊரக வளர்ச்சியில் புதிய பொறுப்பேற்கும் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியாளர்களின் ஊராட்சி வளர்ச்சி உதவியாளர்கள் ஆகியோர், 28—6—74ல் சென்னை இராசாசி மண்டபத்தில் கூடியபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை].**

## உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம்

ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைக்கு, அரசு பெருமளவில் ஊக்கமளித்து வருகிறது. எனவே இத்துறையின் அலுவலர்க்ள், மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். உடனுக்குடன் கிராம மக்கள் உதவிகளைப் பெறுமாறு பணியாற்றவேண்டும். ''நாளைக்கு வரும் பலாக்காயை விட, இன்றைக்கு வரும் களாக்காயே மேல்'' என்பது கிராம மக்கள் கூறும் பழமொழி. எனவே அவர்கள் உடனடியாகப் பலன் கண்டு மகிழவே விரும்புவார்கள்; காலதாமதத்தை அவர்கள் வெறுக்கிறார்கள்.

இந்த மாற்றத்துக்காக நாம் எவ்வளவோ நாள் போராடி வந்திருக்கிறோம். 'தனிக்குடித்தனம் வைத்துப் பார்ப்போம்; எப்படி வளர்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்'' என்று இப்போது ஏற்பாடு செய்திருக்கிறார் நம் மதிப்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள். நீங்கள் சரியாக நடக்காவிட்டால், மீண்டும் பழைய முறையே ஏற்படலாம்.

வருவாய்த்துறையில், கிராமங்களின் வளர்ச்சி முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள மாட்

## ஊராட்சிகளின் நிருவாகத்தில் முக்கிய மாறுதல்கள்

கோட்ட அளவில் முக்கிய அலுவலராக உள்ள கோட்டாட்சித் தலைவரே, தற்போது வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை பணிகள் இரண்டையும் கவனித்து, மேற்பார்வையிடுகிறார். இந்நிலையை மாற்றி, கோட்டாட்சித் தலைவர்கள், வருவாய்த்துறைப் பணிகளை மட்டுமே கவனிக்கவேண்டுமென்றும், ஊராட்சி வேலைகளை முழு நேரமும் கவனிக்கத் தனியாக அலுவலர்கள் பொறுப்பில் இருக்க வேண்டுமென்றும், ஊராட்சி வளர்ச்சித்துறை அலுவலர்கள் கழகம் கோரி வந்துள்ளது. நிருவாகச் சீரமைப்பு ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினரும் அவ்வாறே பரிந்துரைத்துள்ளார். மேலும், இதுபற்றி பல்வேறு ஆய்வுகளும், கருத்துப் பரிமாற்றமும் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு அரசு இவற்றையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர், சில முக்கிய மாறுதல்களை அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி கோட்ட அளவில் வருவாய்த்துறை அலுவல்களும் ஊராட்சிப் பணிகளும் தனித்தனியே பிரிக்கப்பட்டு வருவாய்த்துறையை மட்டுமே தற்போதுள்ள கோட்டாட்சித் தலைவர்கள் கவனித்துக் கொள்வார்கள். ஊராட்சிப் பணிகளை 'கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், (Divisional Development Officer) என்ற புதிய அலுவலர்கள் மேற்கொள்வார்கள்.

கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், இனி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பொறுப்பில், ஊராட்சிகள் பற்றிய அலுவல்கள் அனைத்தையும், கோட்ட அளவில் கவனிப்பார்கள். கோட்டாட்சித் தலைவர்களின் கீழ் இவர்கள் இனி செயல்பட மாட்டார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் (District Development Officer) ஊராட்சிப் பணிகளைக் கவனித்து வந்தனர். இவர்கள் இனி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர் உதவியாளர்கள் (ஊரக வளர்ச்சி) என அழைக்கப்படுவார்கள். இவர்கள் மாவட்ட அளவில் ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவார்கள்.

# தியாகி அரங்கநாதன் சுரங்கப்பாதை





**1965**-ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப் போரின்போது தாய்த் தமிழ்க் காக்க தீக்குளித்த தியாகச் செம்மல்கள்—

தியாகி சிவலிங்கம்.

தியாகி அரங்கநாதன்.

இந்த தியாகச் சுடர்களின் பெயரில் சென்னை தியாகராய நகரில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

துரைசாமி ரோடில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையான தியாகி சிவலிங்கம் சுரங்கப் பாதையைத் திறந்து வைக்கும் பொழுதே கண்ணம்மா பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைக்குத் தியாகி அரங்கநாதன், பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

கண்ணம்மா பேட்டையில அமைந்துள்ள தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதை மிக அழகிய சுரங்கப் பாதையாக அமைக்கப்பட்டுள்ளது.

தியாகராய நகரில் கண்ணம்மா பேட்டை இரயில் பாதையின் மேற்குப் பகுதிகளான மேற்கு மாம்பலம், சைதாப்பேட்டை பகுதிகள் கடந்த பத்தாண்டுகளில் வெகு வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறங்களாகும். இவை தவிர, தமிழ் நாட்டு வீட்டு வசதி வாரியம் அமைந்திருக்கும் அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர் போன்ற மக்கள் வாழும் பகுதிகளும் வருகின்றன. சைதாப் பேட்டை கிழக்கிலும், தியாகராய நகரிலும் பள்ளிகளும், கல்லூரிகளும், கடைகளும் நிறைந்திருப்பதால், அங்கு செல்லும் பலதரப்பட்ட மக்கள்—மாணவர்கள், சிறுவர்கள்— கண்ணம்மா பேட்டைக்கு இரயில் பாதையைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

கண்ணம்மாபேட்டை இரயில் பாதையின் குறுக்கே கடந்து செல்லும் ஊர்திகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 2,363 என்றும், நடந்து செல்பவர்கள் 2,977 பேர்கள் என்றும் போக்குவரத்துப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இரயில் பாதையின் கதவுகள் சராசரி ஒரு மணி நேரத்தில் 31 நிமிடங்கள் மூடிக் கிடக்கிறது. ஒரு மணி நேரத்தில் கதவுகளை மூடியிருக்கும் அதிக பட்ச நேரம் 36 நிமிடங்கள். ஒரு மணி நேரத்தில் 9 முறை கதவுகள் மூடப்பட்டு திறக்கப்படுகின்றன. இவ்வாறு இரயில் பாதையின் கதவுகள் மூடப்பட்டு போக்குவரத்து தடைபடுவதால் சமுதாயத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மறைமுகமாக ஏற்படும் நஷ்டத்தின் மதிப்பு ரூ. 1.17 லட்சங்களாகும். இரயில் பாதையின் கதவுகள் மூடப்படுவதால் ஊர்திகளும், நடந்து செல்வோரும் கதவு திறந்ததும் கடந்து செல்லும்போது, ஏற்படும் நெரிசலாலும், குழப்பத்தாலும் அவ்விடத்தில் விபத்துக்கள் நடைபெறுவது அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. எனவே இவையனைத்தும் கருத்திற்கொண்டு ஆராய்ந்த பின், இவ்விடத்தில் தேவையான நிலமும், இணைப்புச் சாலைகள் அமைக்கப் போதுமான அகலமான நிலப்பகுதியும் இருந்தால் —இந்த சுரங்கப் பாதையினைக் கட்டுவது என முடிவெடுக்கப்பட்டது.

சுரங்கப் பாதையின் நீளம் சுமார் 781 அடிகள். இரயில் பாலத்தின் நீளம் சுமார் 65 அடிகள். கிழக்கில் உள்ள இணைப்புச் சாலைகள் நீளம் சுமார் 405 அடிகள். பாதையின் அகலம் இருபுறமும் உள்ள சுவர்களுக்கு இடையே 50 அடிகள். பாதையின் முழுவதும் 23 அடிகள் அகலம் உள்ள இரு வழிப்பாதைகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாதையின் இருமருங்கும் ஒரு அடி அகலம் கொண்ட பாதுகாப்புச் சுவரும்,

சுரங்கப் பாதையின் மேற்குப் பகுதியில், ரெட்டிகுப்பம் சாலை இணைப்பில், போக்குவரத்துகள் தங்கு தடையின்றிச் செல்லும் பொருட்டு போதுமான அளவு அகலப்படுத்தப்பட்டுள்ளது. இரயில் பாதையின் இரும்புப் பாலத்திலிருந்து தரை மட்டம் வரையில் உள்ள உயரம் 14 அடி 9 அங்குலம் ஆகும். சுரங்கப் பாதையினை யொட்டிச் சைக்கிள்கள், பாதசாரிகள் செல்லுவதற்கு வசதியாக இரயில் பாதையின் கீழ் முறையே சுமார் 8 அடி, 7 அடி 6'' உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் சைக்கிள்கள் செல்ல 11 அடி அகலம், பாதசாரிகள் செல்ல 5 அடி அகலம் கொண்ட வழிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விடத்தில் உள்ள நீரின் தன்மைகளுக்கு ஏற்ப சுரங்கப் பாதையின் கட்டட அமைப்புகளுக்கு ஒட்டிய தொழிற் நுட்ப முறைகளைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுரங்கப் பாதையின் வண்ணப் பூச்சுகள் அதற்கு மேலும் வனப்பும், பொலிவும் தரும் வகையில் பூசப்பட்டுள்ளது.

**வடிகால் அமைப்புகள்**

இவ் வேலைக்கு 125 மெட்ரிக் டன் இரும்பும், 1,500 மெட்ரிக் டன் சிமெண்ட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பணி 21 மாதங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு (நிலப் பற்றுமானம், இணைப்புச் சாலைகள், பக்கச் சாலைகள், நீரேற்றும் குழாய்கள், விளக்குகள் போன்றவற்றிற்கான செலவுகள் உட்பட) ரூ. 31.79 லட்சங்களாகும். தனியார் நிலப்பற்றுமானத்திற்கு ரூ. 3.2 லட்சம் செலவாகியுள்ளது. இத்தொகை மொத்தச் செலவில் அடங்கியுள்ளது. இத் திட்டத்தின் மொத்தச் செலவில் 50 சதவீதம் (சுரங்கப் பாதையின் 36 அடி அகலம் கட்டுவதற்கான செலவு) இரயில்வே துறையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். மீதம் உள்ள 50 சதவீதத்தினை தமிழக அரசும், மாநகராட்சியும் ஏற்றுக்கொண்டுள்ளது. இரயில் பாதையின் பாலத்தின் பகுதியை இரயில்வே துறையினர் கட்டினர். இச் சுரங்கப் பாதையினைக் கட்டும் பணியினை திருவாளர்கள் ஜே. சண்முகம் கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்டது.

தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதை திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்த உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் 'தமிழுக்காக உயிர்நீத்த தியாகிகளை மதிக்கும் வகையில் நமது அரசு இந்தப் பாலத்திற்கு தியாகி அரங்கநாதன் பெயர் சூட்டியுள்ளது என்று தெரிவித்தார்.

விழாவில் உரையாற்றிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 'இந்தப் பகுதி மக்களின் நீண்ட காலக் கனவை அரசு நனவாக்கியுள்ளது. 1957-ஆம் ஆண்டு தேர்தலின்போதே இந்தப் பகுதி மக்கள் இங்குச் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

துரைசாமி ரோடில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையும் கண்ணம்மாபேட்டையில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையும் தியாகராய நகர் மக்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளன. இங்கே சாலை வசதிகள் மட்டுமில்லை. ஏராளமான பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டுள்ளன. பனகல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 'மார்க்கெட்' எல்லாருக்கும் வசதியாக அமைந்துள்ளது.

'வீட்டுவசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் இந்தப் பகுதிகளின் தோற்றத்தில் மாபெரும் மாறுதல்களையும் சுகாதார வசதிகளையும் உருவாக்கியுள்ளன. ஒரு காலத்தில் காடாகக் காணப்பட்ட இடங்கள் அரசின் முயற்சியால் இன்று பெருமளவில் வளர்ச்சியடைந்த இடங்களாக மாறியுள்ளன. இந்த அரும்பெரும் பணிகளைச்செய்துவரும் அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவன் நான்''—என்றார்.

தியாகி அரங்கநாதன் சுரங்கப் பாதையைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நீண்ட நாள் கோரிக்கையாக இந்தப் பாலத்துக்கான கோரிக்கை இருந்து வந்தது என்பதனையும் பல காலங்களில் முயற்சி எடுக்கப்பட்டு முடியாமல் விடப்பட்ட கதையையும், தேர்தல் நேரங்களிலே வாக்குறுதி அளிக்கப்பட்டு அந்த வாக்குறுதிகளெல்லாம் தேர்தல் வாக்குறுதிகளாகவே அதாவது பழைய காலத்துத் தேர்தல் வாக்குறுதியாகவே ஆகிவிட்டன என்பதையும், நம்முடைய நண்பர் கே.எம்.எஸ். அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி, இந்தப் பாலமும் இதைப்போலவே பக்கத்தில் தியாகி சிவலிங்கம் அவர்கள் பெயரால் அமைக்கப்பட்ட பாலமும் உருவாவதற்குக் காரணமாக இருந்த—இருந்து வருகிற தமிழக அரசையும், மாநகராட்சி மன்றத்தையும் பாராட்டிப் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள். அவர் பேசும்போது 'நீங்கள் நிறைய நற்காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். ஏராளமான நன்மைகள் மக்களுக்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் இலாகா அளவில் தெரிகிறது. மக்களுக்கு அவைகளெல்லாம் எடுத்துச் சொல்லப்படவில்லை'' என்று குறிப்பிட்டார்கள்.

''இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற எங்களுக்கு இருக்கின்ற வேலை, நாட்டு மக்களுக்குச் செய்த நன்மைகளைப் பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பதையே நாங்கள் பணியாகக் கொள்ளாமல், சரி—இந்த வேலைகள் முடிந்தன. அடுத்து என்ன நற்காரியங்களை நாட்டு மக்களுக்குச் செய்யலாம் என்ற அந்தக் கவனத்தில் எங்களை நாங்கள் ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தந்த பகுதியிலே இருக்கிற மக்கள் அந்தந்தக் காரியங்களுடைய பலனை நிச்சயமாக அனுபவிப்பார்கள் என்பதையும் அப்படி அனுபவிக்கிற நேரத்தில் இந்தக் காரியங்களைச் செய்தவர்கள் யார் என்பதை உணருவார்கள் என்பதனையும் நாங்கள் அறிகிறோம். அப்படி உணர்ந்தாலும், உணராவிட்டாலும் அவர்களிடத்தில் நாங்கள் கைம்மாறு கருதாமல், அவர்களிடத்திலே எதையும் எதிர்பார்க்காமல் ஜனநாயக மரபுக்கு ஏற்ப அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பணியாற்ற வேண்டிய கடமையை உணர்ந்து தொடர்ந்து எங்களுடைய நற்பணிகளை ஆற்றிக்கொண்டேயிருப்போம் என்பதை இந்த நல்ல விழாவிலே நான் தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.''

ஆமாம், முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நாள்தோறும் நற்பணிகள் தொடருகின்றன, நமது நல்வாழ்வுக்காக!

சென்னை கண்ணம்மா பேட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கநாதன் சுரங்கப்பாதை போன்றும் புதிய அகலமான சாலை அமைப்புத் திட்டங்கள் பலவற்றை சென்னை நகருக்காக நமது அரசு வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

— மாமு

# குப்பையையும் காசாக்கலாம்!

இன்றைய நவ நாகரிக உலகில் குப்பையையும் காசாக்கி விடலாம். கசாப்புக் கடைகளில் சிந்துவாரற்றுக்கிடக்கும் ஆடு, மாடுகளின் உள் வயிற்றுத் தோல் எவ்வளவு பயனுள்ளதாக விளங்கக்கூடும் என்பதைச் சென்னையில் உள்ள தோல் ஆராய்ச்சிக் கழகம் நிரூபித்திருக்கிறது. உள் வயிற்றுத் தோலைப் பயன்படுத்தி அழகான பொருட்கள் பலவற்றை இந்த ஆராய்ச்சிக் கழகம் தயாரித்திருக்கிறது. இதற்காக ஆராய்ச்சி வளர்ச்சிக்கான பரிசும் கிடைத்திருக்கிறது.

ஒரு மாட்டின் உள் வயிற்றிலிருந்து கிடைக்கும் தோல் கிட்டத்தட்ட ஓர் ஆட்டின் புறத் தோல் அளவு பெரியதாக இருக்கும். ஆண்டுதோறும் 1 கோடியே 97 இலட்சத்து 30 ஆயிரம் ஆடுமாடுகளின் தோலும், 71 இலட்சத்து 15 ஆயிரம் எருமைத் தோலும் கிடைக்கின்றன. ஆடு, மாடுகளின் உள் வயிற்றுத் தோலையும் பயன்படுத்திக் கொண்டால் இதே எண்ணிக்கையில் தோல்கள் கிடைக்கும்.

உள் வயிற்றுத் தோல்களைப் பதனிடும் முறைகளைத் தோல் ஆராய்ச்சிக் கழகம் நிலைப்படுத்தியிருக்கிறது. பதப்படுத்திய தோல் 0.4 மி.மீ. முதல் 0.7 மி.மீ. கனமாக இருக்கும்.

> இந்தியாவிலே ஊனமுற்றவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா?
>
> ஒரு கோடியே 40 இலட்சம் பேர். இவர்களில் ஒரு கோடியே 20 இலட்சம் பேர் கை அல்லது கால்களை அடியோடு இழந்தவர்கள். விபத்து அல்லது நோயினால் ஊனம் ஏற்பட்டபோது, அறுவை சிகிச்சை செய்து கை அல்லது கால்களை வெட்டிவிட வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. இவர்களில் பெரும்பாலோர் நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர்.

பதம் செய்த உள்வயிற்றுத் தோலில் மெல்லிய உரோமம் காணப்படுவதால், தேங்காய்ப் பூ துவாலை போன்ற அழகிய தோற்றம் அளிக்கிறது. இந்தத் தோல் ஏற்றுமதி செய்வதற்கு உகந்த பொருட்களைச் செய்வதற்கு ஏற்றதாக விளங்குகிறது. வழுக்காமல் கையில் பிடிக்க வேண்டிய கையுறைகள், ஸ்கூட்டர் கைப்பிடி, விளையாட்டு மட்டைகளின் கைப்பிடி போன்றவற்றைச் செய்வதற்கு இந்தத் தோல் ஏற்றது. பெண்களின் கைப்பை, நகைப் பெட்டி, பர்ஸ், காலணிகள், கழுத்து டை, தோல் ஆடைகள் போன்ற பல்வேறு பொருட்கள் செய்வதற்கும் இது உதவும். இந்தத் தோல் பார்ப்பதற்கு அழகாக இருப்பதால், இவற்றில் செய்த பொருட்கள் மேல் நாடுகளில் நல்ல வரவேற்புப் பெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பொது மக்களும், தோல் பதனிடும் தொழிலைச் சேர்ந்தவர்களும் இந்தத் தோலில் ஆர்வம் காட்டியிருக்கின்றனர். வெளி நாட்டினரும் ஆர்வத்துடன் விசாரிக்கின்றனர் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.

## படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து;
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!



# வேலூர் - தர்மபுரியிலிருந்து...

தமிழ்நாடு பால்வள நிறுவனம் மாநிலத்தில் பால் வளத்தைப் பெருக்க பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. அதன் வேலூர் பிரிவு, வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களையும் அலுவல் வரம்பில் கொண்டு ஒரு திட்ட அலுவலரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

எந்தக் காலத்திலும், பாலை எந்த அளவானாலும் சங்கங்களிடமிருந்து தடையின்றிப் பெற்றுக் கொள்வதும், தரத்திற்கு உரிய தொகையை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பால் வழங்குபவர்களுக்குத் தருவதும் இதன் நடைமுறைப் பணியாகும்.

உள்ளூர் வாசிகளுக்கு வேண்டிய அளவு போக, எஞ்சிய பாலைப் பெற்று பதனம் செய்வது நாள் ஒன்றுக்கு இருபதாயிரம் லிட்டருக்கு மேல் நிறுவன வேலூர் பிரிவு சென்னைக்கு அனுப்பி வருகிறது.

பாலைப் பக்குவம் செய்ய, குளிரூட்டும் நிலையங்கள் ஆம்பூர், வேங்கிக்கால் ஆகிய இடங்களிலும், பால் பதன் செய்யும் பெரு நிலையம் ஒன்று சத்துவாச்சாரியிலும் அமைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் ஓர் குளிரூட்டும் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் நிறைவு பெற்று வருகின்றன.

பால் பத அலுவலர், உதவி மேலாளர், பால் பத உதவியாளர்கள் மேற்பார்வையில் பாலின் தரம் காலையும், மாலையும் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு உரிய விலைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன.

பால் வழங்கும் சங்கங்கள் கணிசமான முறையிலே அமைக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் பெற வேண்டிய தொகையைப் பெறவும், கூட்டுறவு வழியிலே வேண்டிய உதவிகள் கிடைக்கவும் கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் (பால் பதம்) ஆவன செய்து வருகிறார்.

கறவை மாடுகளுக்கு சமன் முறைச் சத்துள்ள தீவனம் பால் வள நிறுவனத்தாரால் ஆம்பூரில் தயாரிக்கப்பட்டு இலாபம் நட்டம் இன்றி கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த கால் நடைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பாலைப் பெருக்குவதில் பசும் புல் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, ஏக்கருக்கு ஆண்டு ஒன்றிற்கு இருநூறு டன்னுக்கு மேல் விளையக்கூடியதும் சுமார் பன்னிரண்டு அடி உயரம் வளர்க்கூடியதுமான நேப்பியர் பாஜ்ரா-21 என்ற புதுமையான இராட்சதப் புல் கண்டுபிடிப்பு, பசும் புல் பெருக்கத்துக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் இலட்சக்கணக்கில் இந்த வகை புல் நாற்றுக்கள் தரப்பட்டு நல்ல முறையில் வளர்க்கப்படுகின்றன. நேப்பியர் பாஜ்ரா-21 புல் லூதியானாவில் உள்ள பஞ்சாப் விவசாயப் பல்கலைக் கழகத்தில் நேப்பியர் புல்லையும், பாஜ்ராவையும் இனச் சேர்க்கை செய்து கருவாக்கி உருவாக்கப் பெற்றது.

சத்துள்ள சாறு கணிசமாகப் பெற்ற நீண்ட இலைகளும் — பருத்த தண்டுகளும் ஒரே நாற்றிலிருந்து ஐந்து கிலோ சத்துள்ள பசுமைத் தீவனம் தருவதுமான ஒரு அரிய வழி வகை அமைப்பை என். பி. 21 பெற்றுத் திகழ்கிறது

ஒரு ஏக்கரில் புல் வளர்த்தால் ரூபாய் இரு நூறு மானியமாக வழங்கப்படுகிறது.

ஏக்கர் ஒன்றில் புல் வளர்த்து ஓராண்டில் வளர்ப்புக்காக மற்றவர்களுக்கு ஒரு லட்சம் நாற்றுக்கள் விற்று பயனடையச் செய்தால் ஒரு ஏக்கருக்கு ரூபாய் ஐநூறு, மானியமாகத் தருகிறது தமிழ்நாடு பால்வள நிறுவனம்.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

**1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்

சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்

என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குநர்



# பத்தாயிரம் ஏக்கர் பண்ணை

உணவுப்பற்றுக்குறை பரவலாக உள்ள ஒரு கால கட்டத்தில் மற்ற மாநிலங்களுக்கும் முடிந்த வரை உணவு அனுப்புமளவுக்கு பசுமைப் புரட்சியில் வெற்றியைக் கண்டிருக்கிறது தமிழகம். அரசின் ஆர்வத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய விவசாயிகளும், விவசாயிகளின் வேட்கைக்கு ஈடுகொடுக்கக்கூடிய அரசாங்கமும் அமைந்திருப்பது மாநிலத்துக்குக் கிடைத்த தனி வாய்ப்பு.

ஆக்கப் பணிகளில், விவசாயப் பெருக்கத்தில், ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களில் குறிப்பிடத் தக்க ஒரு செயல் திட்டம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் அருகே அமைந்துள்ள பத்தாயிரம் ஏக்கர் அரசாங்க விதைப் பண்ணையாகும். தரமான விதைகளைப் பெருமளவில் உற்பத்தி செய்து மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பும் இந்தப் பண்ணை, நாள் ஒன்றுக்கு சுற்றுப்புற மக்கள் சுமார் ஓராயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது.

ஆனந்தவாடி, மேல் செங்கம் காடுகளில் 10,500 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது இப்பண்ணை. செங்கம்—கிருஷ்ணகிரி சாலையில் இரு மருங்கிலும் கிட்டத்தட்ட மூன்று மைல் தூரத்துக்கு இது பரவிக் கிடக்கிறது. மத்திய அரசின் அரசாங்க விதைப் பண்ணைத் திட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டது. மாநில அரசினர், இந்தப் பண்ணைக்கான நிலங்களை ஆண்டுக்கு ஏக்கருக்கு ஒரு ரூபாய் குத்தகை என்ற முறையில் 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து உதவியிருக்கின்றனர். மாநில அரசினரின் வேளாண்மைத் துறை, மின் வாரியம், நகரமைப்புத் துறை, நிலநீர் வாரியம், வனத் துறை இவை எல்லாம் இத்திட்டத்துக்குத் தங்கள் அளவில் ஒத்துழைப்பும் உதவியும் அளித்து வருகின்றன.

இப்பண்ணை 1971 அக்டோபரில் தொடங்கப்பட்டது. தமிழக அமைச்சர்கள் திரு. ப. உ. சண்முகம், திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. கே. இராசாராம் மற்றும் அரசாங்க விதைப் பண்ணை நிருவாக அமைப்பின் தலைவரும் இயக்குநருமான திரு. எம். ஆர். கிருஷ்ணா ஆகியோர் விழாவில் பங்கு பெற்றனர். 1972 தொடக்கத்தில் காட்டைத் திருத்திக் கழனியாக்கும் பணிகள் தொடங்கின.

நிலம் படிப்படியாகப் பண்படுத்தப்பட்டு 1972—73-ல் 1,500 ஏக்கரில் சி.எஸ். எச்-3 வீரிய சோளம், சூரியகாந்தி, ராகி, கொள்ளு, நிலக்கடலை முதலியன பயிரிடப்பட்டன. முன் பருவத்தில் மழை தவறிவிட்டதாலும், பின் பருவத்தில் சற்று அதிகமான மழையினாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டன. 1973—74-ல் முன் பருவத்தில் 3,500 ஏக்கரிலும், பின்பருவத்தில் 1,100 ஏக்கரிலும் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால் மழைக் குறைவினால் இவ்விரு பருவங்களிலும் முறையே 3,500 ஏக்கரிலும், 450 ஏக்கரிலும்தான் பயிர் செய்ய முடிந்தது. முன்னால் சொல்லப்பட்ட பயிர்களுடன் பூசா வெண்டை, கத்தரி, அஞ்சுகம் பயறு முதலியன பரவலாகப் பயிரிடப்பட்டன.

பாசனத்துக்கான கிணறுகள் வகையில் இப் பண்ணைக்கு மொத்தம் 150 கிணறுகள் வெட்ட வேண்டும் என்பது திட்டம். கிணறுகள் 68 அடிக்கு 38 அடி என்ற அளவில் ஒரே படித்தரமாக அமையும். நீர்க்கால் நிலைமைகளுக்கு ஏற்ப ஆழம் 30-லிருந்து 45 அடி வரை உள்ளது. இதுவரை 33 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கிணறுகள் வெட்டும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 1974—75-ல் மேற்கொண்டு 40 கிணறுகள் வெட்டப்படும். சோதனை முறையில் 6 அடி நடு விட்டமும் 146 அடி ஆழமும் உள்ளதாக குழாய்க் கிணறு தோண்டப்பட்டது. ஆனால் பயன் திருப்திகரமானதாக இல்லை.

ஒவ்வொன்றும் 100 குதிரை சக்தி உள்ள இரண்டு புல்டோசர்கள் வாங்கப்பட்டுக் காடுகளை அழிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மாநில அரசிடம் இருந்து 3 புல்டோசர்கள் வாடகைக்குப் பெறப்பட்டுள்ளன. 18 டிராக்டர்களும், 15 ஆயில் இன்சின்களும் வேறு பல இயந்திரக் கருவிகளும் விவசாயப் பணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தண்ணீர் மண் தரையிலேயே வாய்க்கால் வழியாக நீண்ட தூரம் சென்று பாய்வதில் நீர்ச் சேதம் அதிகம் ஆவதால், சிமிட்டி கான்கிரீட் குழாய்கள் போடப்பட்டு வருகின்றன. இதுவரை 14,000 அடி நீளத்துக்குக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மண் வளத்தைப் பாதுகாக்கக் கரை கட்டும் வேலைகள் 1,500 ஏக்கரில் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் 1,000 ஏக்கரில் பணி மேற்கொள்ளப்படும். காட்டைத் திருத்திக் கழனியாக்கும் இந்தப் பத்தாயிரம் ஏக்கர் பண்ணையில் சுமார் 7,000 ஏக்கர் விரைவில் முழு அளவில் சாகுபடிக்கு வந்துவிடும்.




உலோகப் பெட்டிகள் ஒவ்வொன்றும் ஒருவகை

# இங்கே எத்தனை எத்தனை பெட்டிகள்! எத்தனை எத்தனை அழகு!

**பி**றந்த நாளைக் கொண்டாட இனிப்புகள் வழங்குகிறோம். அந்த இனிப்பை-மிட்டாயை வாங்குவதற்குச் சிட்டாய்ப் பறந்து வரும் நம் குழந்தைகளோ அந்த அழகிய மிட்டாய்ப்பெட்டியையே விரும்பிக் கேட்பார்கள்.

குழந்தை உணவு, குடிக்கும் பான வகைகள் முதலானவை அழகிய கண்கவர் உலோக டப்பாக்களில் விற்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றை வாங்கி வரும் நாம், அதிலுள்ளவை தீர்ந்து போனதும் அவற்றைத் தூக்கி எறிந்து விடுவதில்லை. அந்த டப்பாக்களில் மளிகைப் பொருள்களை போட்டு வைத்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இப்படி அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருள்கள் பலப்பல. முகப்பவுடர், பல்பொடி டப்பாக்கள், பல்வேறு புட்டிகளின் மூடிகள் இவையெல்லாம் நாள்தோறும் நம் கைக்கு வந்து போகும் பொருள்களாகும். இவையெல்லாம் எப்படித் தயாராகின்றன? எங்கே தயாராகின்றன.

சென்னைத் திருவொற்றியூரிலுள்ள 'மெட்டல் பாக்ஸ்' (Metal Box company) கம்பெனி' தான் இவைகளைத் தயாரிக்கின்றது.

கண்ணைக் கவரும் அழகிய உலோகப் பெட்டிகளைத் தயாரிக்கும் இந்நிறுவனம் 1933-ல் கல்கத்தாவில் துவக்கப்பட்டது. இந்தியாவில் உலோகப் பெட்டிகளைத் தயாரிப்பதற்கென்று முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்நிறுவனம், 1950-ல் சென்னைத் திருவொற்றியூரில் ஒரு கிளையைத் துவக்கியது. அனைத்து இந்திய அடிப்படையில் தொடங்கப்பெற்ற இந்நிறுவனத்தின் கிளைகள் தில்லி, பம்பாய், கொச்சின், மங்களூர் ஆகிய இடங்களில் உள்ளன.

தொழிற்சாலைக்குள் நுழைகிறோம்!

பல்வேறு இயந்திரங்களின் ஒலிகள் நம் காதில் வந்து சங்கமமாகின்றன. தொழிலாளர்கள் கருமமே கண்ணாய்க் காட்சியளிக்கின்றனர். இயந்திரங்கள் 'இந்திர ஜாலம்' புரிந்து கொண்டிருக்கின்றன. நாம் விஞ்ஞானத்தின் விந்தையைக் கண்டு வியக்கிறோம்.

அதோ! அந்த இயந்திரம் என்ன செய்கிறது?

கண்மூடிக் கண்திறப்பதற்குள் எத்தனை மூடிகளை இது தயாரித்து விடுகிறது! இந்த இயந்திரத்தில், மூடிக்கான 'டிசைன்கள்' அச்சான தகடு ஒன்று நுழைவதைப் பார்க்கிறோம். உடனே மூடிகள் முழு வடிவம் பெற்று ஒரு தொட்டிக்குள் வந்து விழுகின்றன.

இவ்வாறு வகை வகையான இயந்திரங்கள், வகை வகையான உலோகப் பெட்டிகளை—மூடிகளை உருவாக்குகின்ற காட்சியை நாம் நேரில் கண்டு மகிழவேண்டும்.



தமிழ்நாட்டிலுள்ள பெருவாரியான நிறுவனங்களுக்கு, இந்தத் தொழிற்சாலையில்தான் பெட்டிகள், மூடிகள் முதலியன தயாராகின்றன.

இங்கே உலோகப் பெட்டிகள் எப்படித் தயாராகின்றன?

முதலில் ஒரு உலோகப் பெட்டியைச் செய்வதற்கு முன்னால், அதற்கான 'டிசைன்' வரையப்படுகிறது. அந்த 'டிசைன்' தகட்டில் அச்சாகும் விதத்தைப் பார்க்கும்போது, நமக்குப் பத்திரிகைகளை அச்சடிக்கும் அச்சகமே நினைவுக்கு வருகிறது.

அச்சகத்தில் தாள்கள் அடுக்கி வைக்கப்பட்டு ஒவ்வொன்றாக அச்சாகி வெளியே வருவது போன்று, இந்த இயந்திரத்திலுள்ள தகடுகள் ஒவ்வொன்றாக அச்சாகி வெளிவருகின்றன

சாதாரணத் தகட்டுக்கு முதலில் வெள்ளை வண்ணம் பூசப்படுகிறது. பிறகு அந்தத் தகட்டில் டிசைன்கள் பதிக்கப்பட்டு, அதன்மேல் வார்னிஷ் பூசப்படுகிறது. இதற்குப் பிறகுதான் அதற்குரிய இயந்திரத்தில் அந்தத் தகடு பெட்டியாக வடிவம் பெற்று வெளிவருகின்றது. மின்னல் வேகத்தில் மேற்கண்ட எல்லா வேலைகளையும் செய்து முடிக்கிறது, மின்னாற்றலால் இயங்கும் இயந்திரம்!

இங்கே வடிவமைப்புப் பிரிவு புகைப்படப் பிரிவு, அச்சகப் பிரிவு ஆகியவையும், பரிசோதனைக்கூடமும் உள்ளன.



தகட்டுக்கு வண்ணம் பூசும் இயந்திரம்.

உலோகப் பெட்டிகளுக்குத் தேவையான மூலப்பொருள் தகடு. இது இந்தியாவில் டாடா ரூர்க்கேலாவிலிருந்து கிடைக்கின்றது. இவையன்றி இலண்டன், ரஷ்யா, பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்தும் தகடுகள் தருவிக்கப்படுகின்றன

இங்குத் தயாராகும் உலோகப் பெட்டிகளுக்கு இந்தியா முழுவதிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்நிறுவனம் தயாரித்த 'டின்' களில் மீன், இறால் ஆகியவை அடைக்கப்பட்டு அமெரிக்கா, பிரிட்டன் முதலான மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

தமிழக அரசு சிறுசேமிப்புத் துறை வழங்கும் உண்டியல்கள் உரப்பொருள்கள் அடைக்கும் டப்பாக்கள் போன்றவை இங்கே உருவாகின்றன.

இனிப்பு வகைகள், பிஸ்





எண்ணெய் 'டின்கள்' உருவாவது எண்ணிலடங்கா.

கோத்துகள், ஊர்திகளின் எண்ணெய், வனஸ்பதி படச்சுருள்கள் ஆகியவற்றுக்கான பெட்டிகளும், மருந்து, மதுவகைப் புட்டிகளுக்கான மூடிகளும், பாட்டரி 'ஜாக்கெட்'டுகளும், காலண்டர்களும் இங்கே பெருமளவில், இலட்சக்கணக்கில் தயாரிக்கப்படுகின்றன.

உலோகத்தாலான பெட்டிகள் செய்யும் இந்நிறுவனம் பிளாஸ்டிக், காகிதத்தாலான பெட்டிகளையும் செய்கிறது, பம்பாயிலுள்ள கிளை இவற்றைத் தயாரிக்கின்றது.

நல்ல தரமான, கவர்ச்சியான வண்ண வண்ணப் பெட்டிகளை உருவாக்குவதில் சிறந்து விளங்கும் தன்மைக்காகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்நிறுவனம் பரிசு பெற்றுள்ளது. தோட்டக்கலையிலும் இது தோற்றுவிடவில்லை.

.இந்த நிறுவனத்தில் மொத்தம் 991 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு இந்நிறுவனம் பலவகையிலும் உதவிகள் புரிந்து வருகின்றது. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வாங்கவும், 'சகாய நிதி' என்ற பெயரில், துயர்படும் தொழிலாளர் குடும்பத்தினருக்கு நிதியுதவியும், காசநோய் போன்ற நோய்கள் பீடிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கியும் உதவுகிறது.



உற்பத்தித்திறன், சுற்றுப்புறத் தூய்மை, இயந்திரப் பாதுகாப்பு பற்றிய யோசனைகளைக் கூறும் தொழிலாளருக்கு ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இவையன்றி 'யோசனைத் திட்டம்' (Suggestion Scheme) ஒன்றும் செயல்படுகிறது. நாட்டுக்குத் தேவையான தரமான பொருள்களைத் தயாரித்தல், உற்பத்தியின் பயன் போன்ற தகுந்த யோசனைகள் கூறுவோருக்குத் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் தொழிலாளர் அனைவரும் கலந்து கொள்கின்றனர். ரூ. 1,000 வரை பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் கண் பார்வையற்றவர்களும் பணி



கண்மூடிக் கண் திறப்பதற்குள் உருவாகும் மூடிகள்'



மூடிகளை உருவாக்கும் இயந்திரம்

யாற்றுவதை நாம்பார்வையிடு கிறோம்.

20 ஆண்டுகள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குப் பரிசுப் பொருள்களும், தேசிய சேமிப் புப் பத்திரமும் வழங்கப்படு கிறது. ஆண்டுதோறும் சுமார் 50 தொழிலாளர்கள் சுற்றுலாச் செல்கின்றனர். தமிழக, கேரள, கர்நாடக, ஆந்திர அரசு தொழிற்கூடங்கள் முத லானவற்றைப் பார்வையிட்டுப் பயன்பெறுகின்றனர்.

அரசு தொழில்நுட்பத் துறை யில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஒருசிலர், இங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரிய ஆலோசனைகளை வழங்கித் தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலத்துக்கும் உதவி வருகிறார்கள்.



பட்ச் சுருள் பெட்டி தயாரிக்கும் இயந்திரம்

கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம், இலவசத் திரைப்படம் தொழிலாளர் கல்வி போன்ற நல்ல செயல் திட்டங்கள் தொழிலாளர்களுக்கு மன நிறைவைத் தருகின்றன.

இவ்வாறு தொழிலும், தொழிலாளரும் வளர்வதற் கேற்ற வகையில் சிறந்து விளங் கும் இந்நிறுவனம், உலோகப் பெட்டிகள் செய்வதில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி.வி.ஜி.



# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

*சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர் கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**

# ஆலயத் திருப்பணிக்கு யுனெஸ்கோ உதவி



இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி கோயில் திருப்பணிக்காகப் பத்தாயிரம் டாலர் மதிப்புக்குப் பண்டங்களாக உதவி செய்ய ''யுனெஸ்கோ'' நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்கெனவே திருவரங்கம் அரங்கநாத சுவாமி ஆலயத் திருப்பணிக்குப் பண்டங்களாக 'யுனெஸ்கோ' நிறுவனம் உதவி செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் உதவி பெறும் இரண்டாவது திருக்கோயில் இராமேசுவரம் கோயில் ஆகும்.

ஆலயத் திருப்பணியின்போது கோவில் கோபுரங்களைப் புதுப்பித்து வண்ணம் பூசுவது போன்ற வேலைகளைச் செய்ய சவுக்குக் கம்புகளால் ஆன சாரம் அமைக்கப்படுவது வழக்கம். இந்த வேலைகள் முடிந்ததும் அந்தச் சவுக்குக் கொம்புகள் விறகாக எரிப்பதற்கு அன்றி வேறு எதற்கும் பயன்படா.

எனவே, தமிழகக் கோவில்கள் திருப்பணிக்கு நிரந்தரமாக உதவும் பொருட்டு மடக்கி முடுக்கக் கூடிய இரும்புச் சாரம் (இருநூறு அடி உயரம் கொண்டது) அலுமினியத்தால் செய்யப்பட்ட ஏணி, கனமான பண்டங்களை ஆலய விமானம் வரை தூக்கக் கூடிய தானே இயங்கும் சாதனம் உள்ளிட்ட 5 சாதனங்களை அது தரும். தவிர, பருவநிலை மாற்றம் காரணமாகப் பாதிக்கப்படாத வண்ணப் பூச்சுக் கலவை, கருங்கற்களையும் காலத்தால் அழிக்க முடியாதபடி பாதுகாக்கும் ஓர் இரசாயனக் கலவை ஆகிய ஏழு பண்டங்களையும் கொடுத்துதவ இசைவு தெரிவித்துள்ளது. இவற்றிற்காக 10 ஆயிரம் டாலர் ஒதுக்கவும் அனுமதி வழங்கி உள்ளது.

இராமேசுவரம் கோயில் திருப்பணி துவங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணி முடிந்து விடும்.

இராமேசுவரத்திற்கு அடுத்தபடியாக சிதம்பரம் சபாநாயகர் (நடராசர்) ஆலயம், காஞ்சீபுரம் தேவராச சுவாமி ஆலயம் ஆகிய இரு திருக்கோவில்களின் திருப்பணிக்கும் 'யுனெஸ்கோ' உதவி கோரப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மாநிலத்தில் 1,500 கோவில்களுக்குத் திருப்பணி செய்து புதுப்பிக்க அறநிலையத் துறை முடிவு செய்துள்ளது. திருச்சி மலைக்கோட்டை மகா கணபதி கோவில், சோளிங்கர் இலட்சுமி நரசிம்ம சுவாமி ஆலயம், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோவில், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் ஆலயம் ஆகிய நான்கு மலைக் கோவில்களுக்கும் இழுவை ரயில் (வின்ச்) அமைக்கவும், பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு இன்னொரு இழுவை ரயில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டு இதற்குத் தேவையான சில இயந்திர சாதனங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி கோரி மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. இழுவை ரயில் போட ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஐந்து முதல் ஆறு இலட்சம் ரூபாய் வரை செலவாகும்.

திருவாரூர் தியாகராச சுவாமி, திருநாகேசுவரம், திருவரங்கம், திருநெல்வேலி நெல்லையப்பர், திருவண்ணாமலை ஆகிய 5 கோவில்கள் திருப்பணிக்காக ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மாநில அரசு மானியம் வழங்கியுள்ளது.

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகளில் ஒன்றான மதுரை பழமுதிர் சோலை (அழகர்) கோவில் வரை பக்தர்கள் வாகனங்களில் செல்ல இதுவரை சரியான பாதை அமைப்பு இல்லை. இந்தக் குறையைப் போக்கிப் பழமுதிர் சோலை, கோபுர கங்கைவரை செல்ல 5 இலட்சம் ரூபாய் செலவில் நல்ல சாலை அமைக்கப்பட்டு அந்த வேலை முடியும் கட்டத்தில் உள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் வெளிப் பிராகாரம் (கிரி பிராகாரம்), மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் கோபுர விமானத்தைப் புதுப்பித்துத் தளம் அமைப்பது, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் 20 இலட்ச ரூபாயில் திருப்பணி செய்வது, திருவாரூர் தியாகராசேசுவரர் சுவாமி கோவிலில் நாலாவது இராசகோபுரம் அமைத்துக் கமலாலய நீராழி மண்டபம் அமைப்பது, திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலைப் புதுப்பிப்பது ஆகிய திருப்பணி வேலைகள் இந்த ஆண்டு நடைபெறும் பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

காஞ்சி அருள்மிகு காமாட்சி அம்மன் கோயிலில் 5 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்படும். அப்போது புதியதொரு இராசகோபுரம் ஒன்றும் எழுப்பப்படும்.

பழனி, திருத்தணி ஆகிய முருகன் திருத்தலங்களில் பக்தர்கள் வசதிக்காகக் கூடுதலாக விடுதிகள் கட்டப்படும். 19 இலட்சம் ரூபாய் செலவில் 108 அறைகள் கொண்ட ஒரு புதிய விடுதி பழனியில் கட்டுவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வள்ளுவர் வெறுத்த ஓவாப்பிணி




அன்றொருநாள் முன்னிரவு; உண்ட பின்னர்
அறைசென்று நூல்படிக்க அமர்ந்தேன்; பின்னால்
தென்றல்ஒத்த என்மனைவி வந்தாள்; பக்கம்
திறந்திருந்த திருக்குறளைப் புரட்டிக் கொண்டே
''என்றைக்கோ இருபதுநூறாண்டு முன்னால்
எழுதிவைத்த இக்குறளைப படிக்கும் போதும்
ஒன்றொன்றும் இனிக்கிறதே, அத்தான்! 'நாட்டின்
ஓவாத பிணி' யென்றால் என்ன?'' என்றாள்.

''நாட்டுக்குப் பிணிவருமா?' என்று கேட்டாள்
நங்கைக்கு விளக்கத்தைச் சொன்னேன்;'' உள்ள
வீட்டுக்குப் பிணிவந்தே ஒருவர் மாண்டால்
விளக்கொன்றே அணைந்துவிடும்; மரமடர்ந்த
காட்டுக்குள் தீபரவி நோயும் வந்தால்
கரிமிஞ்சும்; சிலஉயிரே போகும்; ஆனால்
நாட்டுக்குத் தீராத பிணியும் வந்தால்
நலமுண்டா? அமைதியுண்டா?'' என்று சொன்னேன்.

''தீராத பிணியென்றால் என்ன அத்தான்?
தெளிவாகக் கூறுங்கள்!'' என்றாள் மங்கை
''ஏரார்ந்த பைங்கிளியே! விளக்கமாக
இன்னுமொரு உவமையினால் கூறுகின்றேன்
வேரோடிச் செழித்திருக்கும் செடியின் கீழே
வேர்ப்புழுக்கள் சூழ்ந்துவிட்டால் பட்டுப் போகும்!
ஏரோடிச் சீரோடி வளர்ந்திருக்கும்
இந்நாடும் இனப்பகையால் அழியும்'' என்றேன்.

பொல்லாத ஆமையொன்று வீட்டுக்குள்குள்ளே
புகுந்திட்டால் அடிமனையே பாழபாழ் அன்றோ?
கல்லாமை, அறியாமை, பொறாமை, வாய்மை
கழறாமை, சூதுடமை, கயமை, நன்றி
இல்லாமை, முயலாமை, பகைமை, கையால்
இரக்கின்ற இழிவுடைமை,தீமை போன்ற
வல்லாமை பலநாட்டில் புகுமேயானால்
வளநாடு வாழ்ந்திடுமோ?'' என்று சொன்னேன்.

'இல்லை, இல்லை; ஒன்றுமில்லை; வறுமையாட்சி
எம்மைவிட்டு மீள்வதில்லை' என்றே இங்குப்
பல்லிளித்துத் தூங்குகின்ற மடையருக்குப்
பாட்டடியால் அடிகொடுத்தார் குறளார்; 'காணும்
நல்லநிலம் எனும்நானும் என்வயிற்றில்
நானூறு வகைச்செல்வம் வைத்திருக்க
'நல்குரவுக் கூக்குரல்ஏன்?' என்று கேட்டே
நல்மண்ணாள் சிரித்திடுவாள் என்றார் அன்றோ?

நெல்வயலில் நோய்வந்தால் பதரே மிஞ்சும்!
நீருக்கே நோய்வந்தால் வரட்சி மிஞ்சும்!
பல்லுக்கு நோய்வந்தால் சொல்லா மிஞ்சும்?
பாவைக்கு நோய்வந்தால் அழகா மிஞ்சும்?
வில்விழிக்கு நோய்வந்தால் காட்சி ஏது?
விதைகட்கே நோய்வந்தால் நாற்றே ஏது?
நல்லவர்க்கே தொல்லைஎன்ற நோயும் வந்தால்
நாடிங்கே சுடுகாடாய் மாறிடாதா?

28 AUG 1974

கண்ணுக்குத் தெரியாத கிருமிக் கூட்டம்
கவின்உடலில் புகுமானால் காய்ச்சல் தோன்றும்!
மண்ணுக்கும் இதுபொருந்தும்; உடனிருந்தே
மாய்க்கின்ற உட்பகையால் நாடே வீழும்!
'எண்ணுகின்ற எண்ணத்தில் உயர்வு வேண்டும்;
எல்லாரும் பகுத்துண்ணல் வேண்டும்' என்றே
வண்ணவண்ணக் கருத்தாலே உலகம் வாழ
வழிசமைத்த வள்ளுவரின் பெருமை ஒன்றா?

ஓயாத நோய்என்று செந்நாப் போதார்
ஒன்றிரண்டா தமிழ்மறையில் கூறி வைத்தார்?
'காய்சின'மே அழிக்கின்ற நோய், நோய் என்றார்!
'கயமை'யதும் இன்னொருநோய் என்று சொன்னார்!
வாயாரப் 'பொய்யுரைத்தல்' ஒருநோய் என்றார்!
வஞ்சகரின் 'கெடுநட்பு' மறுநோய் என்றார்!
தீயநெஞ்ச 'அழுக்காறு' பெருநோய் என்றார்!
திரண்டுள்ள இந்நோய்கள் ஓய்வதெந்நாள்?

அடியாலே உலகளந்த மேதை இன்னும்
அடடாவோ எத்தனைஎத் தனைக்கருத்தை
இடித்துரைத்துப் போயுள்ளார்; இவரைப் போலே
ஏர் உழவர் பெருமையினைச் சொன்னோர் யார், யார்?
'குடிமை'இங்கே ஓங்கட்டும் என்றார்; ஆனால்
குடிகெடுக்கும் 'குடி' வேண்டாம் என்றே சொன்னார்!
'மடி'தானே அனைத்துக்கும் வீழ்ச்சி என்றார்;
மக்கள்எல்லாம் கல்வியின்றேல் 'மாக்கள்' என்றார்!

''வீதிக்கு வீதிபல கொடிகள் நாட்டி
வீண்வாதச் சச்சரவுக் கட்சி வைத்துச்
சாதிகளை உருவாக்கித் தேயும் பாழும்
சமுதாய நோய்என்றோ ஒழியும்?'' என்றேன்
''ஆதியிலே சாதியுண்டா?'' என்றாள் இல்லாள்
''அச்சொல்லே தமிழல்ல!'' என்று சொன்னேன்
''ஏதத்தான் தேசீய நூலாய் நந்தம்
எழில்குறள்நூல் ஆகவில்லை?'' என்றாள் மங்கை.

சாகாத முப்பாலால் சட்டம் செய்து
சரித்திரத்தில் தமிழினத்தை உயர்த்தி விட்ட
பாகான வள்ளுவரை உலகோர் மொத்தம்
பாராட்டும் காலமிங்கே தூர மில்லை;
ஏகஇந்தி யாமாந்தர் 'மனு'வை மிஞ்சும்
'இனியகுறள்' போற்றுகின்ற திருநாள் தோன்றும்!
வேகாத சோறெல்லாம் குதிக்கும் போது
வெந்திருக்கும் பானைகள் நாம் பொறுப்போம்!'' என்றேன்.

''ஓவாத பிணியென்றால் என்ன என்றே
உயர்விளக்கம் அளித்தமைக்கு நன்றி, அத்தான்!
தேவைபல வளருகின்ற இந்நூற்றாண்டில்
திரும்பஇங்கே வள்ளுவனார் வரமாட் டாரா?''
பூவையவள் புதிருடனே என்னைக் கேட்டாள்!
புன்னகையைப் பதிலாக வைத்தேன். பாவை
ஆவலுடன், ''பாலிங்கே ஆறிற்'' றென்றாள்;
ஆம். மூன்றும் பால்விளக்கம் காணச் சென்றோம்!



கவிஞர். கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ

# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

புண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்!

அந்தப் புண்ணியத்தின் தரிசனம் அன்னக் கொடியின் மௌனப் புன்னகையில் வீரமணிக்குக் கிட்டியது. முதுமொழியின் இளம் ரத்தம் அப்போது அவனுக்கு ரத்த தானம் வழங்கியிருக்கத்தான் வேண்டும். இல்லையெனில், அவன் அவ்வாறு மனம் விட்டு—வாய்விட்டுச் சிரித்திருக்க மாட்டான்! ''அம்மான் மகளா? . . .வா, வா!'' என்று காதலாகிக் கனிவுடன் முகமன் மொழிந்தான். உள்ளங் கையில் நெல்லிக் கனியென மின்னிப் பளிச்சிட்ட அந்த வைரச் சிமிக்கிகளின் தரிசனம் அவனை அப்பொழுது நிலை குலையச் செய்தது என்னவோ உண்மை தான். என்றாலும், எல்லாச் சங்கடத்தையும் கடந்தும் கடத்தியும் அவன் சிரித்தான்.

பெரியவர் ஆதிமூலத் தேவர் சிமிக்கிகளைப் பறி கொடுத்த மனச் சலனத்தோடு கைகளைப் பிசைந்தவராக ஏக்கமும் துக்கமும் புடை சூழ—படை சூழ நின்றார். வேர்வை வழி தேடி வழிந்து ஓடியது. கட்டுக் கலைந்த கட்டுக் குடுமியைத் தட்டிச் சேர்ந்து முடிந்து கொள்ளக் கூட நினைவிழந்து தவித்தார் அவர். கொண்ட வைராக்கியத்தைக் கொண்டு செலுத்தத் தீட்டியிருந்த திட்டத்தில் பெற்ற மகனே பிடி மண்ணைப் பிடித்துப் போட்டு விட்டானே என்ற மனத்தாங்கலோடு, பூசை வேளையில் புகுந்த அன்னக் கொடியின் தோற்றமும் அவரைத் தள்ளாடித் தடுமாற வைத்துவிட்டது. 'மச்சினன் மகள் அன்னத்தின் அலங்காரச் சிமிக்கிகளையே பகடையாக்கி, மச்சினனை ஓட ஓட விரட்டத் துடிச்ச எனக்கு முன்னே, சிமிக்குகளுக்கு உடையவளான அன்னம் எப்படி இங்கிட்டு வந்திச்சாம் ? .......தடயம் கிடைச்ச தடத்திலேயே ஓடோடி வந்திருக்குமா இந்தப் பொண்ணு? . . . இனிமேலே நான் ராமையாவைப் பழிக்குப் பழி வாங்க ஏது சாத்தியம் ?..' என்று நினைத்து நெஞ்சம் மருள் கொண்டு நினைவுகள் மறுகிக் குறுக நின்றார் அவர்.

''அத்தான்!'' என்று உயிரை அழைத்திடும் உயிரின் உறவோடு அழைத்தாள் அன்னம். நிலா முற்றத்தை முற்றுகை இட்டிருந்த நிலவுப் பால் நுரைகள் கரை தாண்டி, கன்னியின் பவள மேனியில் பட்டுத் தெறித்துக் கொண்டே இருந்தன.

''அன்னம்!'' என்று பதில் குரல் கொடுத்தான் வீரமணி.

''நல்லா இருக்கீங்களா?''

''உன் புண்ணியத்திலே நல்லா இருக்கேன், அம்மான் மகனே!''

''நீ . .?''

''உங்க புண்ணியததிலே நானும் நல்லாய்த்தான் இருக்கேனுங்க, அயித்தை மகனே!''

பேசிய அவள் பாசம் உணர்த்திய பாந்தமும், பேசாத அவள் நேசம் உணர்த்திய பந்தமும் வீரமணியை எங்கெங்கெல்லாமோ வழி காட்டி, வழி நடத்திச் சென்றிருக்கக் கூடும்.

அவனுடைய தளர்ந்த நெஞ்சம் மலரத் துடித்துக் கொண்டேயிருந்தது. கைக்கு மெய்யாகக் காட்சி தந்த வைரச் சிமிக்கிகளை உரியவளிடம் ஒப்படைத்து விட வேண்டியது நாணயம் கூடிய பண்பாகும் என்று அவன் கருதினான். ஆனால், எப்படி ஒப்படைப்பது, என்ன காரணம் காட்டி ஒப்படைப்பது என்பது இப்போது அவனுடைய மண்டையைக் குடைந்த பிரச்சினையாக ஆகிவிட்டது. அன்றொரு நாள், தான் சுவைத்து எச்சில்படுத்திய முட்டைத் தோசையை அன்னம் சுவைத்துத் தின்ற நடப்பு அவனுக்குப் புதிய வல்லமையைக் கொடுத்தது. தனக்குச் சிலட்டூரில் அப்பா சம்பந்தம் முடித்திருந்த ஏமாற்றத்தின் பூச்சாண்டித் தனத்தைப் பற்றிக் கூறாதவே அவனுடைய அந்தரங்க உள்ளம் கூசிய நிலையில், உள்ளங்கையிலிருந்த வைரச் சிமிக்கிகளை ஒன்று சேர்த்துப் பையப் பைய மேலே உயர்த்திக் காட்டினான் அவன். உடையவளுக்கு உடைமை பூண்ட உடைமையை ஒப்படைப்பதற்கு அப்பாவின் ஒப்புதலோ அனுமதியோ தேவையில்லை என்பதை அவன், அறிவு பூர்வமாக மட்டுமின்றி, உணர்வு பூர்வமாகவும் அறிந்திருந்தான்.

''நான் வரட்டுங்களா, அத்தான்?'' என்று விடை கேட்டாள் அன்னம்.

விசேஷம் ஏதாவது உண்டா, அன்னம்?''

'வாய் பேசத் தெரியாத எங்க வீட்டு வெள்ளையை வாய் பேசத் தெரிஞ்ச நீங்க கட்டிப் போட்டிருக்கிறது ' தானுங்க விசேஷம்!'' என்றாள் அன்னம்.

பொட்டில் அறை பட்ட மாதிரி இருந்தது வீரமணிக்கு.

அன்னம் தன் அத்தையின் அன்புக் கணவனை அன்பு பிசகாமல் பார்வையிட்டாள்.

ஆனால், அவரோ அன்னத்தையும் வீரமணியையும் பொறுமையுடன் நோக்கினார். பிறகு, ''அன்னம்! உங்க காளை தப்புச் செஞ்சுது; அதுக்கு உண்டான தண்டனையைக் கொடுத்திட்டான் எங்க வீரமணி!'' என்று ஒரு அபாண்டப் பொய்ப் பழியை மகன் பேரில் சுமத்தி விட்டார் பெரியவர்.

வீரமணிக்குச் சுருக்கென்றது. பெற்றவரின் அநியாயப் பழிக்குப் பின்னே கள்ளத் தனமாக ஒளிந்திருந்த சூது மதியின் சூட்சுமத்தை அவன் அறிந்து கொள்ளத் தப்பவில்லை. அம்மான் மகளுக்கு என்பேரில் ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் அப்பா இப்படிப் பழி போட்டிருக்கிறார்! — அப்பாவின் கெட்டி யாருக்கு வரும்? சரி; இந்த அப்பா தானா அம்மாணிடம் ஏமாந்துவிட்டார்?

அன்னக் கொடி சிரித்தாள். சிரிப்பின் காந்தி அவளுடைய இயல்பான அழகை 'ஒட்டிக்கு ரெட்டியாகக் கூட்டிக் காட்டியது. சரியத் துடித்த முந்தானைப் பகுதியைச் சரிப்படுத்தியபடி, ''அத்தான், ஒரு பாவமும்

அறிய மாட்டாங்க. பின்னே, அவங்க மேலே ஏதுக்கு வீண் அபவாதத்தைப் போடுறீங்க? எங்க வெள்ளையைக் கட்டிப் போட்டவங்க நீங்க! இந்த உண்மையை நான் அறியாமல் இல்லே! . . .'' என்று தெரிவித்தாள் அன்னம்.

ஆதிமூலம் சற்று நேரம் மௌனம் காத்தார். பிறகு, ''தப்புச் செய்கிறவங்க தண்டனையை அனுபவிச்சுத்தான் தீர வேணும்! புரிஞ்சுக்க, அன்னம்!'' என்று புத்தி சொன்னார்.

''தப்புத் தண்டா செய்கிறவங்க கட்டாயம் தண்டனையை அனுபவிச்சுத்தானே தீர வேணும்?''

''ஓ! . . ஆமா, ஆமா!''

அன்னத்தின் வாய்ச் சிரிப்பு வழி தடுமாறி வழிந்தது. மாமன்காரர் மறுகி நின்ற திசைக்கு அவள் தன் பார்வையைத் திசை திருப்பி, வீரமணியின் மீது நிலைக்கச் செய்தாள். ''எல்லாம் எனக்குப் புரியுமுங்க, மாமா!'' என்றாள் அவள். அப்புறம், அத்தை மகனை ஏறிட்டு நோக்கினாள். ''எங்க அப்பா சொன்ன மாதிரி, எங்க வெள்ளைக் காளையை நல்ல தனமா எங்க கையிலே ஒப்படைச்சாக வேணுமுங்க,'' என்றாள். ஆதிமூலத்தின் மீது ஏவி விட்டிருந்த பார்வையை மாற்றி, அத்தை மகன் பேரில் ஏவி விட்டாள். ''அத்தான் போயிட்டு வரட்டுங்களா?'' என்றாள்.

உடன் இருந்த தந்தையையும் மறந்து, அன்னக் கொடியையே இமைக்காமல் பார்த்தான் வீரமணி. பிறகு, தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளை அவளுடைய பார்வையில் படும்படியாக ஏந்தியபடி, அன்னத்தையும் அப்பாவையும் ஓடுகிற ஓட்டத்தின் கதியோடு எடை போட்டான். அடிமனத்தில் ஏற்பட்ட மாறுதலின் விளைவாக, நியாயத்தின் அடிப்படையில் நல்லதொரு முடிவுக்கு வரலானான் அவன். ''வேறே விசேஷம் ஒண்ணும் இல்லையா?'' என்று எதையோ நினைவூட்ட விரும்பிக் கேட்டான் தேவர் மைந்தன்.

அன்னம் இந்தக் கேள்விக்கும் மௌனப் புன்னகையையே விடையாகச் சிந்தினாள். சிந்தாத முத்துக்களாகப் பற்கள் காட்சியளித்தன.

''விசேஷத்தைச் சொல்ல வேண்டியவங்களும் சொல்விக் காட்ட வேண்டியவங்களும் நீங்கதானுங்களே, 'அத்தான்?'' என்றாள் அவள்.

அன்னக் கொடியை வீரமணி ஏறிட்டுப் பார்த்த நேரத்தில் தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளையே அன்னம் தொடுத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்த காட்சியைக் கண்டான்! வைரச் சிமிக்கிகளைப் பற்றி உடைமைக்காரியான அன்னம் ஏன் மூச்சுப் பேச்சுக் காட்டக் காணோம்? 'என்னை அப்பா சோதிக்கிறது போறாதின்னு அம்மான் மகளும் சோதிக்குதாங்காட்டி? . . .' இவ்வாறு மனம் குமைந்தான்.

அப்பொழுது :

பெரியவர் பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்தார். அது ஒரு சமிக்ஞை — அடையாளம். மகனைத் திசை திருப்பச் சாகசம் பயின்று தோற்றுவித்த ஓர் உபாயம். ஆனால், வீரமணி என்னவோ சிந்தனை பண்ணியவாறு நின்றதைக் கண்டதும், அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. பகடைக் காய்களாக்கி வைரச் சிமிக்கிகளை உருட்டி விளையாடி, அதன் மூலம் ராமையாத் தேவரை உருட்டி வீழ்த்தக் கனவு நீட்டிக் கொண்டிருந்தவர் அவர். 'வைரச் சிமிக்கிகளை என் அனுமதி இல்லாமலே அன்னத்திடம் வீரமணி கொடுத்து விடுவானோ, என்னவோ?' என்னும் தவிப்பில் அவர் தண்ணீராய் உருகினார், பாவம்! . . .

வீரமணிக்கு இப்போது ஒரு மாற்றம் தேவைப்பட்டது. ''அன்னம்!'' என்று அன்பு ஒழுக, பாசம் சிந்தக் கூப்பிட்டான் அவன். கூப்பிட்டுக் கொண்டே, கூடத்தின் மையப் பகுதியை அண்டி நடந்தான். வானொலிப் பெட்டியைத் திருகினான். ''அன்னம், விசேஷம் என்கிட்டேயிருந்துதான் வர வேணும்னு நீ ஆசைப்பட்டால் அந்த விசேஷத்தை நான் சொல்லிப்பிடுறேன்; சொல்லிக் காட்டிபிடுறேன்!'' என்று கூறி அழகுடன் முறுவல் பூத்தான். அன்னத்தின் சொக்கும் புன்னகை அவனைச் சொக்குப் பொடி தூவிச் சொக்க வைத்தது! 'ஆகா!.. உயிரினும் இனி தாய்ப் பெண்மை இனிக்கத்தான் செய்கிறது!'...பாரதியில் இணைந்தான் அவன் !....

மறுகணம், வானொலியினின்றும் பாட்டுப் புறப்பட்டது.



''காணி நிலம் வேண்டும்-பராசக்தி!
காணி நிலம் வேண்டும்!—
அங்கு
தூணில் அழகியதாய்—
நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—
அந்தக்
காணி நிலத்திடையே—ஓர்
மாளிகை
கட்டித்தர வேண்டும்!....''

பாட்டு திடுதிப்பென்று ஏன் நின்று விட்டது?

வீரமணி மருண்டான். தன் தகப்பனார் ஆவேசத்தோடு வானொலியின் விசையை நிறுத்திவிட்ட அலங்கோலத்தைக் கண்டதும், அவனுடைய ரத்த நாளங்கள் துடித்தன. ''அப்பா, நல்ல பாட்டாச்சுங்களே? நல்ல இடத்திலே ஏன் நிறுத்திப்பிட்டீங்க?'' என்று ஆற்றாமையோடு வினவினான்.

''நல்ல பாட்டை நல்ல இடத்திலே நிறுத்தினால்தான், அந்த நல்ல பாட்டோட நல்ல ஞாபகம் நம்ப நெஞ்சிலே சதா ஒலிச்சிக்கிட்டே இருக்கும் ! சரி சரி. பின்கட்டுப்பக்கம் கொஞ்சநேரம் வாயேன்.

எனக்கு நெஞ்சை என்னமோ பண்ணுது!'' என்று பரிதாபமாகக் கூறிவிட்டு, திறந்த மார்பைத் திறக்காமலே தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார் தேவர்.

வீரமணி பதறினான்; துடித்தான்; துவண்டான்; தவித்தான். பாசத்தை பாசத்தின் நிமித்தம் நம்பினான். பாசத்தை நம்ப 'நிமித்தம்' கேட்கவேண்டுமா?- அவன் வரை பாசம் ஒரு பூவிலங்குதான்! அப்பாவைத் தொடர்ந்தான். ''அன்னம், கொஞ்சம் பொறு, திரும்பிடுறேன்'', என்று சொல்லிய பிறகு, நடையை ஓசைப்படாமல் விசைப்படுத்தினான்.

ஆதிமூலத் தேவர் கைந்நொடிப் பொழுதுக்குக் கைவிரல்களைச் சொடுக்கிக்கொண்டிருந்தார்!

பின்கட்டில் நட்சத்திரக் குழந்தைகள் சிரிக்கின்றன

வீரமணி இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்ததன் விளைவாக ஏற்பட்ட மனச்சுமையோடும் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளின் சுமையோடும் நின்றான்;

தனக்குத் தானே என்னென்னவோ கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். பிறகு, அப்பாவின் தந்திரம் என்னவாக இருக்கக் கூடுமென்ற ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டவன்மாதிரி, ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தித் தலையையும் ஆட்டிக் கொண்டான். ஆனாலும், மனத்தின் இரண்டகநிலை அவனது முகத்தில் 'களை' யைத் தோற்றுவிக்க மறுத்தது.

''வீரமணி!''
''சொல்லுங்க, அப்பா!''

''அன்னத் தோட வைரச் சிமிக்கிகளை என் கையிலே கொடுத்திடு!''

''அன்னத்தோட வைரச் சிமிக்கிகளை அன்னத்தின் கைகளிலேதான் கொடுக்க வேணும்!''

''என் கையிலே கொடுத்திடு''

''ஊகூம்!''

''கொடுத்திடுப்பா, தம்பி!''

''ஏன், நீங்க காதிலே போட்டுக்கிடப் போறீங்களா?''

''தம்பி, வைரச் சிமிக்கிகளை நான் போட்டுக்கிறதுக்காகக் கேட்கல்லே. விளையாடக் கேட்கிறேனுக்கும்!''

''விளையாடவா? சிமிக்கிகளோடவா விளையாடப் போறீங்க, அப்பா?''

''நீ என்ன தம்பி விரல் சூப்புகிற வாண்டு மாதிரி கேட்கிறே?.. அன்னத்தோட வைரச் சிமிக்கிகளைப் பகடைக் காய்களாக்கி, உன் அருமை அம்மான் ராமையாவோடே விளையாடப் போறேன்!''

''என் அம்மான் மகள் அன்பு அன்னக் கொடியோட வைரச் சிமிக்கிகளைக் கண்டெடுத்த புள்ளி நான். அதை என் கையிலேயிருந்து பறிச்சு நீங்க விளையாட ஆரம்பிச்சீங்கன்னு, அப்பாலே அந்தச் சங்கதி ஊர் நாட்டிலே அடிபட ஆரம்பிக்கும்; அப்புறம் உங்களைப்பற்றி ஊர்ச்சனங்க கொண்டிருக்கிற நல்ல பெயருக்கு மாசு ஏற்படும். இல்லிங்களா, அப்பா?.. நீங்க என் அம்மானோட உங்க இரண்டு பேருக்கும் ஊடாலே உள்ள விவகாரத்தை உத்தேசிச்சு மோத நினைச்சால், அதுக்கு இந்த வைரச் சிமிக்கிகளைக் கையாள நினைக்காதீங்க; அப்படி நீங்க நினைச்சால், அந்தத் துரோகத்துக்கு நான் இடம் தர ஒப்பவேமாட்டேன்! உங்களை அம்மான் ஏய்ச்சதுக்குப் பழிக்குப்பழி வாங்க நீங்க விருமபினால், அதுக்கு ஊர் நாட்டிலே வழிக்கா பஞ்சம் வந்திடும்?....''

வீரமணியின் பேச்சில் சூடு பறந்தது.

''இதுதான் உன் முடிவா?''

''ஊம்!''

''நீ இப்பைக்கு அந்த வைரச் சிமிக்கிகளை என்ன செய்யப் போறே?''

''அது என் சொந்த விஷயம்! அது சம்பந்தமாய் உங்ககிட்டே இப்போ எதையும் சொல்ல ஆசைப்படல்லே!..'' என்று வாழைப்பழத்தில் செருகிய சூரிக்கத்தியாகச் சொற்களைப் பாய்ச்சினான் வீரமணி.

ஆதிமூலம் செயலற்று நின்றுவிட்டார். தலைமுடிகள் தோளில் புரள, கோபம் ஆறாமல் அங்கிருந்து வெளியேறினார்.

கொஞ்ச நாளாக அப்பாவின் நடத்தை ரொம்பவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது ! வீரமணி நெடுமூச்செறிந்தான். கையில் மறைந்திருந்த சிமிக்கிகளின் வைர ஒளி அவனது உள்ளுணர்வுகளைத் தொட்டும் தொடாமலும் உறுத்திக்கொண்டிருந்த சங்கடத்தை இனிமேலும் அவன் சோதனைப்படுத்த ஒப்பவில்லை. ஆகவே, வெளியேறினான். நிலவுக் காற்று இதமாகவே இருந்தது. ''அன்னம், அன்னம்!'' என்று அன்போடும் பாசத்தோடும் நேசத்தோடும் விளித்தான்.

முன்கூடத்தில் கையில் எதையோ பிரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள் அன்னக்கொடி. தோள்பட்டையிலிருந்து புடவை சரிந்து விடும் அளவுக்கு அவள் மனம் தடுமாறி விடவில்லை.

முதற் குரலைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தோன்றவில்லை அன்னம்.

வீரமணி மறுபடி விளித்தான்.

''என்னுங்க, அத்தான் ?'' என்று கேட்டாள். ''மாமாவுக்கு நெஞ்சடைப்பு சரியாயிடுச்சுங்களா ?'' என்று தொடர்ந்தாள்.

''ஆமா; சரியாயிடுச்சு. அப்பாவுக்கு என்னவெல்லாமோ புதுசு புதுசாய் வியாதிகள் தாக்குது!''

''எல்லாம் சரியாகிப் போயிடுமுங்க அத்தான். என் கையினாலே நாலு வேளை சோறு ஆக்கிப்போட்டேன்னு, எல்லாச் சீக்கும் கடலே கதின்னு ஓடிப் போயிடாதுங்களா?''

''ஓகோ!''

வீரமணி கம்பீரமான தன்னம்பிக்கையின் கம்பியில் நின்று ஊசலாடினான். நல்ல சிரிப்பும் பீறிட்டது. பெண்மை இப்போதும்தான் இனிக்கிறது! பேஷ்!....

''நான் புறப்படுகிறேன். அப்பாவுக்குப் பசி தாங்காது. போகட்டுமா?''

''போயிட்டு வரட்டுமான்னு கேள், அன்னம்!...இரு; ஒரு நிமிஷம் நில்லு, அம்மான் மகளே!'' என்று, அன்பின் நெகிழ்ச்சியுடன் சல்லாபமாகச் சொல்லிக் கொண்டே, இதயத்

தின் காதற் துடிப்புடன் காதற் பெண்ணின் கடைக்கண் பணியினை அனுபவிக்க, மெல்ல மெல்ல — மெள்ள மெள்ள நெருங்கினுன்.

அன்னம் நாணத்தின் தங்கப் பதுமையாக நின்ருள்.

''அன்னம், உன் வைரச் சிமிக்கிகளை அம்மான் மடியிலே வச்சுக்கிட்டு இருந்திருக்காங்க போலே! வெள்ளை விசயமாக அவர் இங்கிட்டு வந்த சமயத்திலே, அந்த வைரச் சிமிக்கிகள் மடியிலேருந்து நழுவி எங்க வீட்டுத் திட்டி வாசல் புறத்திலே விழுந்து கிடந்திச்சு. நான் எடுத்து வச்சிருந்தேன். இந்தா!'' என்று ஓர் அமைதியின் நிறைவோடு பேசிவிட்டு, வைரச் சிமிக்கிகளைக் கைவிரல்களிலே ஏந்தி நீட்டினுன் வீரமணி.

''இந்த வைரச் சிமிக்கிகள் என்னுடையது இல்லீங்களே? ஒரு வேளை, இதுகளை என் கண்ணுலத்துக்காக அப்பா செஞ்சிருந்தாலும், அதைப் பற்றி அப்பா என்கிட்டே கட்டாயம் சொல்லியிருப்பாங்களே? இது என்ன ஒரே பூடகமான சமாச்சாரமாக இருக்குதுங்களே, அத்தான்? அப்பா மடியிலேருந்து இந்த வைரச் சிமிக்கிகள் விழுந்திருந்தால், அந்த ரகசியம் அப்பாவைக் கேட்டால்தான் விளங்கும்! ஆமாங்க, அத்தான்!''

அன்னம் திகைப்பும் மலைப்பும் மீதூர நின்ருள்.

அப்போது:

''வீரமணி!'' என்று அழைத்துக் கொண்டே வந்து நின்ருர் ஆதிமூலத்தேவர்.

''மாப்பிள்ளை!'' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்து நின்ருர் ராமையாத்தேவர்.

வீரமணி கதிகலங்கித் தலையை நிமிர்த்தினுன். பிறகு அவர்கள் இருவரையும் அருமையை பளிச்சிட நோக்கினுன். ''நீங்க ரெண்டு பேரும் கொஞ்ச நாழி பேசாமல் நில்லுங்க. நானும் அன்னமும் கொஞ்ச நாழி தனியே ஒரு ரகசியம் பேசி முடிச்சிட்டு வந்துப்பிடுறேம்'' என்ருன். பிறகு, அன்னக் கொடியை நோக்கி, ''அம்மான் மகளே, அங்கிட்டு கொல்லைப் பக்கம் வா! ஒரு சங்கதி இருக்கு'' என்று தெரிவித்தான்.

தேவரும் தேவரும் விழித்தார்கள், பாவம்!

அம்மான் மகள் அன்னக்கொடியும் அத்தைமகன் வீரமணியும் நடந்தார்கள்!

அவர்கள் இருவரையும் ''வருக! வருக!'' என்று இரு கைகளையும் ஏந்தி வரவேற்றது அந்தத் தனிமை!

(வளரும்)




உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல்
பெருக அதற்கு
'ப்ளேனோஃபிக்ஸ்'*
தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் ''ப்ளேனோஃபிக்ஸ்'' உபயோகித்தீர்களானல், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே ''ப்ளேனோஃபிக்ஸ் மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானு என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாருதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒயபில்லாச் செல்வம்.

M&B May&Baker

மே & பேக்கா (இந்தியா) பிரைவேட் லிட.
பம்பாய் கலகத்தா. கவுஹாத்தி. இந்தோர் லக்னோ. சென்னை நியூடெல்லி. பாட்னு

''ப்ளேனோஃபிக்ஸ்'' என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு
* டிரேடு மார்க்

சிறுவர் பகுதி



# வானொலிக் கல்வி

வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவதைக் கேட்கிறோம். குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பல சுவையான நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஒலிபரப்பாகி நம்மையெல்லாம் மகிழ்விக்கின்றன. கோடை விடுமுறை முடிந்து, பள்ளியெல்லாம் திறந்து பாடம் நடக்கும் நேரமல்லவா? அதனால் வானொலி நிகழ்ச்சிகள் மீண்டும் தொடங்குகின்றன. ஜூலை 15-ஆம் நாள் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மாணவர்க்குப் பயன் தரும் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துள்ளார். குறிப்பாக வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைகின்றன என்பதை இக்கட்டுரை மூலம் தெரிந்து கொள்வோமா?

சென்னை, திருச்சி வானொலி நிலையங்களின் கல்வி ஒலிபரப்பு முதன் முதலாக முறையே 1938, 1940-ஆம் ஆண்டுகளில் தொடங்கியது. அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் 1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ந் தேதி ஒலிபரப்பைத் துவக்கி வைத்தார். 1965 வரை இந்த நிகழ்ச்சிகள் வகுப்பு வாரியாகத் திட்டமிடப்படாமல் பொதுவாக உயர்நிலைப் பள்ளி வகுப்புகள், நடுநிலைப் பள்ளி வகுப்புகள் என்று பிரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. ஆயினும் நிகழ்ச்சிகள் பாடத் திட்டங்களைச் சார்ந்தே அமைக்கப்பட்டன. நிகழ்ச்சிகளைக் கேட்கும் மாணவ, மாணவியர்களுக்குக் கற்கும் முறையில் ஒரு புதுவித அனுபவத்தை வளர்த்து அறிவு பெருகக் கல்வி ஒலிபரப்பு வகை செய்து வந்தது.

1965-ஆம் ஆண்டிலிருந்து, சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் கல்வி நிகழ்ச்சிகள் வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு, 6-வது வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பு மாணவ, மாணவியரும் அவரவர்கள் பாடத் திட்டத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளைக் கேட்டு, வகுப்பு அறை அறிவை வளப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டன.

இவ்வகுப்புவாரி முறையால், கல்வி நிகழ்ச்சிகளைத் தீவிரமாகக் கேட்கும் ஊக்கம் பள்ளிகளில் பெருகி வருகிறது. பள்ளிகளிலிருந்து தனிப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடமிருந்தும் சென்னை, திருச்சி நிலையங்களில் பெற்றுள்ள கல்வி நிகழ்ச்சி சம்பந்தமான கடிதங்கள், மதிப்பீடு அறிக்கைகள் இவைகளைக் கொண்டு கவனித்தால், தற்பொழுது சுமார் 3,000 பள்ளிகள் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயன்பெறுகின்றன என்று தெரிந்து கொள்கிறோம்.

வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், அறிவியல் ஆகிய பாடங்கள் இடம் பெறுகின்றன. இப் பாடங்களை ஒட்டிய நிகழ்ச்சிகள், அந்த அந்த வகுப்புப் பிள்ளைகள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில், சுவையுள்ள நாடகமாகவோ, சித்திரமாகவோ, விளக்கப் பேச்சாகவோ அமைக்கப்படுகின்றன. வெறும் உரை வடிவில் அமைக்கப்படும் நிகழ்ச்சிகள் மிகக் குறைவு. இந்த முறை, கேட்கும் பிஞ்சு உள்ளங்களில் செய்திகள் நன்கு பதிவதோடு, கேட்கும்போது அலுப்புத் தட்டாமலும் இருக்க வகை செய்கின்றது. இலக்கியம், நாட்டு நடப்பு, நவீன விஞ்ஞானம், பெரியார்களின் வாழ்க்கை, வள்ளுவப் பண்புகள் இது போன்ற பல செய்திகள் சிற்றுரையாகவோ, சிறு சித்திரமாகவோ ஒலிபரப்பாகின்றன. இவை அந்தந்த வகுப்பிற்கான பாடத் திட்டத்தையொட்டி அமைந்தவை.

நிகழ்ச்சிகளில் மாணவர்கள் நேரடியாகப் பங்கு கொள்ளும் முறையில், வினாடி வினா நிகழ்ச்சிகள், மாணவர் விவாத அரங்குகள், பட்டி மன்றங்கள் இவை போன்ற நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகி வருகின்றன. அறிவை வளர்த்துக் கொள்வதில் ஒரு போட்டியும் உற்சாகமும் இந் நிகழ்ச்சிகளால் மாணவர்களுக்கு ஏற்படுகின்றன எனக் கூறலாம். இது தவிர,

## நல் வெண் பா

மருதங்குடி வெங்கடேசன்

நாட்டு முன்னேற்றத்தையும், அறிவியல் முன்னேற்றத்தையும் நேரில் பார்த்து உணரும் ஒரு அனுபவத்தைப் பெறும் வகையில், தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், வானிலை ஆராய்ச்சிக் கூடம், பால் பண்ணை, சிற்பங் கூடங்கள், அனல் மின் நிலையம் போன்ற இடங்களுக்குச் சில மாணவர்களை அழைத்துச்சென்று, அங்கு நடக்கும் பணிகளையும் இயங்கும் முறைகளையும் அங்குள்ள பணியாளர்களைக் கொண்டே கூறச் செய்து, அந்தக் கருத்துக்களை எல்லாம் ஒலிப்பதிவு செய்து அமைத்து ஒலிபரப்பப்படுகின்றன.

இவை தவிர, 6,7,8-ஆம் வகுப்புகளுக்கு அந்தந்த வகுப்பிற்கான ஆங்கிலப் பாட நூல்களை ஒட்டி ஒவ்வொரு வகுப்பிற்கும் 12 ஆங்கிலப் பாடங்கள் ஒலிபரப்பாகின்றன. உயர்நிலை வகுப்புகளுக்கும் பாட நூல்களை ஒட்டியே ஆங்கில நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. பெங்களூர் வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் கல்வி வல்லுநர்களைக் கொண்டு இப் பாடங்கள் நடத்தப்படுவதால், மொழிப் பயிற்சியில் சரியான பேச்சு முறையைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பள்ளிக் குழந்தைகள் பெறுகிறார்கள்.

ஆங்கிலத்தில் வானொலி ஆசிரியர் கூறும் ஒவ்வொரு பயிற்சிக்கும் தமிழில் சிறிய முன் குறிப்பும் நிகழ்ச்சியுடன் இணைக்கப்படுவதால், பயிற்சி முறைகளை நிகழ்ச்சி நடக்கும் போதே மாணவர்கள் முன் கூட்டிப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆங்கிலப் பாட நிகழ்ச்சிகளிலும் கதைப் பகுதி, ஒலிக் குறிகளோடு சுவையான நாடக வடிவிலேயே அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளின் விவரங்கள் அடங்கிய —வகுப்பு வாரியாக அமைத்த குறிப்பேடுகள், சுவரொட்டிகள் முதலியன நிகழ்ச்சிகளைக் கேட்பதாகப் பதிவு செய்து கொண்டுள்ள பள்ளிகளுக்கு இலவசமாக அனுப்பப்படுகின்றன. கிராமப் பள்ளிகளும், சிறிய நகரப் பள்ளிகளும் அதிகமாக இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயன் பெறுகின்றன. நாடக, சித்திர வடிவில் அமையும் நிகழ்ச்சிகளும், ஆங்கிலப் பாட நிகழ்ச்சிகளும் பெரிதும் பயனுள்ளவையாக இருப்பதாக ஆசிரியர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் வகுப்பறைப் பாடங்கள் போலில்லை. வகுப்பறையில் கையாள முடியாத சில முறைகள், உத்திகள் இவைகளை வானொலி நிகழ்ச்சிகளில் கையாள முடிகின்றன. நாடகங்களை யொட்டிய புதிய செய்திகளையும் வானொலி திரட்டி அளிக்கிறது. மேலும் பள்ளிகள் அழைக்க முடியாத சில வல்லுநர்களின் உரையை அவர்கள் குரலிலேயே வானொலி வழங்குகிறது. அத்தகைய சில காரணங்களால் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் பயிற்சி முறையிலே ஒரு தனித் தன்மை பெற்று விளங்குகின்றன். ஆகையால், இவை கற்கும் முறையில் மாணவர்களுக்கு நன்கு பயன்படுவதுடன், கற்பிக்கும் முறையில் ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றன.

எனவே, வானொலிக் கல்வி நிகழ்ச்சி நிரலை, வகுப்பு பாட நேரத்திலே இணைத்து, மாணவர்கள் தவறாது கேட்கச் செய்தால், மாணவர்களின் கல்வி அறிவு, வளத்திலும் தரத்திலும் மேலும் உயரும். நாட்டின் கல்வி முன்னேற்றத்தில் தனக்குரிய பணியை நல்ல முறையில் ஆற்றுவதே, வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளின் குறிக்கோளாகும்.

—பி.வி.ஜி.

பாலமுத மேனும் பசியாத போதினிலே<br>
மேலும் அருந்துவது வேதனையாம் — வேளைதொறும்<br>
முன்னுண்ட நல்லுணவு முற்றும் செரித்துவிட்ட<br>
பின்னுண்டு நல்லுயிரைப் பேண்.

நீரோடு தேன்கலந்து நித்தம் அதிகாலை<br>
ஆரமுதாய் எண்ணி அருந்துவதால் — சீராய்<br>
இதயம் இயங்கும் எடைகுறையும் மிக்க<br>
புதுவலிமை உண்டாகும் போற்று.

என்றுமிரு வேளை எளிதாய் மலங்கழிதல்<br>
நன்றாம் உடல் நலம்பெறுமாம்—நந்தம்<br>
குடலிலே தூய்மை குறைந்தாலே நல்ல<br>
உடல்தூய்மை குன்றும் உணர்.

விரும்பிமிகத் தேநீர் வெறும்வயிற்றில் காப்பி<br>
அருந்துவதால் தீமை அதிகம் — நரம்பு<br>
தளர்ச்சி பசியிலாத் தன்மைதூக்க மின்மை<br>
நலக்குறையும் உண்டாகும் நம்பு.

மோரை மிகவிரும்பு மூச்சுவிட்டு மெல்லமெல்ல<br>
நீரை அருந்து நிரம்பவே—கீரைவகை<br>
சேரும் எளிய சிறந்த வுணவுண்டு<br>
பாரில் நலத்தையே பார்.

எப்போதும் நம்முணவில் ஏறும் புளிமிளகாய்<br>
உப்பும் குறைதல் உயர்வாகும்—செப்புகிற<br>
இம்மூன்றில் ஒன்றதிகம் என்றாலும் அவ்வுணவால்<br>
நம்முடலில் தீங்குவரும் நம்பு.

இருமல் எனுங்கபநோய் இல்லாமல் நீங்கும்<br>
திருவும் வலிவுமே சேரும்—விரைவாய்<br>
முசுமுசுக்கை தூதுவளை மூலிகையின் சாறெடுத்துப்<br>
பசுமோரில் பாலில் பருகு.

பார்போற்றும் வல்லாரைப் பச்சிலையின் சாறெடுத்துச்<br>
சீர்நல்கும் ஆவின்பால் சேர்த்துண்டால்—ஓர்பிணியும்<br>
நேராது நல்ல நினைவாற்றல் ஓங்கிவரும்;<br>
சோராத உள்ளம் தரும்.

பொல்லாநோய் சேர்க்கும் புகைசுருட்டு வாழ்விலே<br>
பொல்லாங்கைச் சேர்க்கும் புகைசுருட்டு—நல்லோர்<br>
விரும்பாத தீப்பழக்கம் வேண்டாவாம் யார்க்கும்<br>
கரும்பாக வாழ்வாய் களித்து.

தேவையிலாப் பேச்சினிலும் தின்பதிலும் உண்பதிலும்<br>
நாவை அடக்கென்றார் நம்குறளார்—பாவாய்<br>
அடக்க முடைமை அறிவுடைமை கொண்டு<br>
நடக்கும் முறையே நலம்.

# ஒன்றையே கூறுகிறோம்: நிரூபணமான உழைப்புத்திறம் என்றால் இதுவே நிரூபணமான உழைப்புத் திறம்—நம் நாட்டிலும், 45 நாடுகளிலும் நிரூபணம்

# ஜெனித் தரம் என்றால் அதுதான்!



## 45 நாடுகளும் தவறுசெய்திருக்க முடியாது

இந்தியத் தரநிர்ணய விதிகளால் வரையறுக்கப்பட்ட கண்டிப்பான இலக்கணங்களுக்கு மட்டுமின்றி, பிரிட்டிஷ் மற்றும் சர்வதேசத் தர விதிப்புகளுக்கும் ஈடு நிற்பவை ஜெனித் எஃகுக் குழாய்கள். எனவே, அவை உலகிலேயே அதிநவீனமான சில நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவருவதில் அதிசயமென்ன!

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப் பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா, ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே, உழைப்புத்திறனை நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.

**ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,**
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458




everest/864a/ZSP/tm




சென்ற இதழ்த் தொடர்ச்சி:

**காட்சி-4**

*(கார்மேகம் ரவியும் பாமாவும் பேசிக் கொண்டிருக்கின்றனர்).*

பாமா: ரவி அண்ணு! எதிர்வீடு காலியானுலும் காலியானது..,...

ரவி: அந்த வீட்டு மோகனே உன்னுல் பார்க்க முடியலேயாக்கும்?

பாமா: உன்னைப் போல நினைச்சுக்காதே. அந்த வீடு காலியான பிறகு நீ என்னை பார்க்கக்கூட நீ வரவே இல்லியே! லலிதா அங்கே இல்லேங்கிறதுனுலேதான்! அது இருக்கட்டும்.. அந்த மேகவிலாசத்தை வாடகைக்குப் பிடிக்க அப்பா, சித்தப்பா, அம்மா மூவருக்குமே போட்டி! வீடு யாருக்குக்கிடைக்குமோ?

ரவி: கிடைக்க வேண்டியவுங்களுக்கு கிடைக்கும்.

பாமா: அபாரமான பதில்! உன் ப்ரமோஷனுக்காக அந்த வீட்டை சித்தப்பா எப்படியாவது பிடிக்கணும்னு தவம் கிடக்கிருங்க. நீ அலட்சியமா பேசுறே.....

ரவி: பாமா, அப்பாவுக்கு எப்பவும் வேலே வேலே! பெரியப்பாவுக்கும் தனக்காக எதையும் தேடிக்கிறதிலேயே கவனம். பெரியம்மாவும் தன் தம்பிக்காக வீடு தேடுருங்க...எல்லாம்....சுயநலம்...நாமும் சுயநலமா இருக்கணும்......

பாபா: அதுக்காக என்ன செய்றது?

ரவி: நான் என் வேலேயை ராஜினுமா செய்துவிட்டேன்.

பாமா: சித்தப்பா ப்ரமோஷனுக்காக அலேயுருங்க....நீ வேலேயை ராஜினுமா செய்ததை சுலபமா சொல்றே..இப்ப சித்தப்பாவுக்கு வீடு கிடைச்சுட்டுதுன்னு என்ன செய்றது....

ரவி: வீடு கிடைச்சுடுமா? நீலமேக மாமா என்ன சொன்னுராம்?

பாமா: அடி சக்கை...மாமா போட ஆரம்பிச்சுட்டியா? வெள்ளிக்கிழமை மாலே வீட்டுக்கு வருவதாச் சொல்லியிருக்கிருராம். அப்போ மூணு பேருக்கும் முடிவு சொல்றதா கூறியிருக்கிருர்.

ரவி: பாமா....அங்கே நீலமேக மாமா வருவதற்கு முன்னுலே அப்பாகிட்டே நான் வேலேயை ராஜினுமா பண்ணினதைச் சொல்லு ....அதுவரையும் யாரிடமும் சொல்லாதே.... கடைசி நேரத்திலே நானும் வர்றேன் வேடிக்கை பார்க்க...இல்லே விஷயத்தை முடிக்க....

பாமா: என்ன அண்ணு சொல்றே.....

ரவி: வெள்ளிக்கிழமை மாலே விவரமா புரியும்....அப்ப நான் வர்றேன் அவசர வேலே இருக்கு.

**காட்சி-5**

*(வீட்டில் கார்மேகமும் அவர் மனேவி கல்யாணியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்).*

கல்யாணி: ஏங்க எதிர்வீட்டிலே வெள்ளே அடிக்கிருங்க...நிறைய ஆட்கள் எல்லாம் வந்து வேலே செய்யுருங்க.......

கார்மேகம்: எப்படியும் இன்றைக்கு ஈவினிங் எல்லாம் தெரிஞ்சு போகும்....! நமக்கு வீடு கொடுக்கத்தான் சுத்தம் செய்யுருங்களோ என்னவோ!

கல்: நான் அந்த அம்மாகிட்டே உருக்கமா சொல்லிட்டு வந்திருக்கேன், தனபால் மாமனுர் நல்ல வசதியானவர். நீங்கள் எவ்வளவு வாடகை கேட்டாலும் கொடுப்பார்ன்னு. அதனுலே தனபாலுக்குத்தான் கிடைக்கும்.

கார்: அதையும்தான் பார்ப்போமே! ஹூம் எதை உறுதியாச் சொல்ல முடியும்? அந்த நீலமேகத்தின் நடவடிக்கைகள் கிராக்குத்தனமாகவும் இருக்கு...நாம் வீடு கேட்கப்போனுல் உங்க வீட்டுக்கு வருகிறேன் முடிவு சொல்ல... வெள்ளிக்கிழமை மாலே வர்றேன். எல்லாரும் சேர்ந்து வந்து அங்கே இருங்கண்ணு சொல்ருர். எல்லாம் வேடிக்கையாய் இருக்கு.

கல்: நல்ல வேடிக்கைத்தான் சொந்த மைத்துனனுக்கு வீடு பிடித்துக் கொடுக்காமே வேறு யாருக்கோ வீடு தேடி அலேயுறது.......

கார்: மனேவியும் தம்பியுமே எனக்குப் போட்டிபோடுறது வேடிக்கையில்லே? கல்யாணி...சரி..சரி..நீ சொல்றதை எல்லாம்

கேட்டுகிட்டு நிற்க வேண்டியநிலை! வீடு பெற நில்லுன்னு அப்பவே சொல்லியிருக்காங்க. இப்ப வாடகை வீடு பெற நிற்கவேண்டிய நிலை. அதோட நீ பேசுறதையும் கேட்க வேண்டிய நிலை.

## காட்சி-6

*(கார்மேகத்தின் வீடு பாமா, தன் தந்தையிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்).*

*பாமா:* அப்பா! அதோ தனபால் மாமா, காளமேகம் சித்தப்பா எல்லாரும் வர்றாங்க....

*கார்:* வரட்டும்! வரட்டும்! அந்த நீல மேகம்லே வரணும்......

*காள:* (வந்துகொண்டே) அண்ணே இன்னைக்கு ராசிபலன்படி எனக்குத்தான் அந்த வீடு கிடைக்கும்.

*கார்:* எனக்கு விவரம் தெரிஞ்சதிலே இருந்து எதிர்வீட்டிலே குடியிருந்தவர் நீல மேகம்...அதனாலே எனக்குத்தான் கிடைக்கும் *(கல்யாணி சமையலறையிலிருந்து வருகிறாள்)*

*கல்:* இந்தப் பாருங்க அவருடைய சம்சாரத்தை எனக்கு ரொம்ப நல்லா தெரியும். அந்த அம்மாளும் இப்ப நம்ப வீட்டுக்கு வர்ரேண்ணு சொல்லியிருக்காங்க. அதனாலே அந்த வீடு மேகவிலாசம்-என் இஷ்டப்படி தனபாலுக்குத்தான் கிடைக்கும்.

*காள:* நீங்க இரண்டு பேரும் இப்படி சொன்ன பிறகு நான் எப்படி சொல்றது? தயவு செய்து இரண்டு பேரும் எனக்காக விட்டுக் கொடுத்திடுறது நல்லதுண்ணு நினைக்கிறேன். அதுவும் ரவியோட உத்தியோக விஷயமாக இருக்கிறதுனாலே.....

*பாமா:* சித்தப்பா உங்களுக்கு விஷயம் தெரியாதா? ரவி அண்ணா தன் வேலையை ராஜினாமா செய்துட்டாங்க......!

*காள:* உண்மையாகவா?

*கார்:* இந்தக் காலத்திலே வாடகை வீடு கிடைக்கிறதைவிட வேலை கிடைக்கிறது கஷ்டம். அதை ராஜினாமா செய்வாங்களா?

*கல்:* ரவிக்கு மூளை கெட்டுப் போச்சா? அதுவும் இந்தக் காலத்திலே வேலையை ராஜினாமா செய்வாங்களா?

*பாமா:* ரவி அண்ணா காரணமில்லாமே வேலையை ராஜினாமா செய்திருக்க மாட்டாங்க.

*காள:* காரணம் வேறேயாக்கும்! மடையன் இப்படி செய்வானா....அவன் வரட்டும்!

*பாமா:* அதோ ரவி அண்ணாவே வர்றாங்க நேரிலேயே கேட்டிடுங்க...*(ரவி வருகிறான்)*

*ரவி:* என்னைப் பற்றித்தான் எல்லாரும் பேசுற மாதிரி தெரியுது...நீங்க எல்லாரும் சேர்ந்து கேட்கிறதுக்கு முன்னாலே நானாகவே சொல்லிவிடுகிறேன். நான் என் வேலையை ராஜினாமா செய்தது உண்மை! உண்மை! உண்மை!

*காள:* இருக்கிற வேலையை விட்டுட்டு என்ன செய்றதா உத்தேசம்? உனக்காக நான் வீட்டுக்குப் படுறபாடு.....

*கல்:* அப்புறம் நம்ப தகராறுகளை பேசிக் கொள்ளலாம். அதோ நீலமேகமும் அவர் மனைவியும் வர்றாங்க....வாங்க.......

*கார்:* வாங்க...,வாங்க....உட்காருங்க...... உங்களுக்காகத்தான் காத்திருக்கோம்...

*நீல:* நான் வரும்போதே ஒரு முடிவுக்கு வந்துட்டேன்..நம்ப வீடு மேக விலாசத்தை காளமேகம் பையன் ரவிக்காக கொடுத்திடலாம்னு........

*காள:* நீங்க வந்தவுடனே நானே சொல்லணும்னு நினைச்சேன். எனக்கு வேண்டாங்க... அண்ணனுக்கோ அண்ணிக்கோ கொடுத்திடுங்க......

*நீல:* உங்களுக்கு வேண்டாம்னா, வேறே ஒரு முடிவு செய்யணும்.

*கார்:* உங்க முடிவு எதுவானாலும் சொல்லுங்க...உங்களை எனக்கு நல்லா தெரியும்.... என்னையும் உங்களுக்கு நல்லா புரியும்.

*நீல:* அதனாலேதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். நீங்களே பார்த்திருப்பிங்களே. எதிர் வீட்டிலே நிறைய பேர்கள் வேலை செய்யுறாங்க.....

*கார்:* இரண்டு நாளா புதுவீடு கட்டுறது மாதிரிதான் வேலை நடக்குது.

*நீல:* வேலை நடக்கிறதுக்கு காரணம் அந்த வீட்டை இரண்டாக தடுக்கிறேன்.

*கல்:* இரண்டு போர்ஷனாக வாடகைக்கு விடப் போறீங்களா? நீங்கள் சொன்னால் சரி.

*நீல:* பின்னாலே உள்ள இடத்திலே ஒரு சிறிய தொழிற்சாலை தொடங்கப்போறேன். இரண்டு போர்ஷனிலே ஒன்றில் என் மகன் மோகனையும் இன்னொரு போர்ஷனிலே என் மகள் லலிதாவையும் தனிக்குடித்தனம் வைக்கப் போறேன். இதை உங்களிடம் சொல்லத்தான்.....

*கார்:* உங்க பெண்ணையும் பிள்ளையையும் தனிக்குடித்தனம் வைக்க எங்களிடம் சொல்றீங்க.....அதுக்காகவா. . . .வெள்ளிக்கிழமை சாயங்காலம் எங்க எல்லாரையும் காத்திருக்கச் சொல்லி இங்கே வந்து சொல்றீங்க!

*நீல:* உங்ககிட்டே சொல்லாமே யார்கிட்டே சொல்றதுங்க.

*கல்:* அன்றைக்கே இதை நீங்க சொல்லியிருக்கலாம்.

*நீல:* அது முறையில்லீங்களே!

*கார்:* எங்களை காக்கச் சொல்லிட்டு இப்படி சொல்றதுதான் முறையா?

*நீல:* என்ன இருந்தாலும் பெண்ணை பெற்ற அப்பா நீங்க! பிள்ளையைப் பெற்ற அப்பா கார்மேகம்!

*கார்:*
*காள:* }(ஒரே சமயத்தில்) என்ன சொல்றீங்க..!
*கல்:*

*நீல:* என் மகன் மோகனுக்கு பாமாவையும் என் மகள் லலிதாவுக்கு ரவியையும் திருமணம் செய்து கொடுக்கச் சொல்றேன்..ரவிக்காகத்தான் ஒரு சிறிய தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போறேன்.

*நீல:* பாமாவும் ரவியும் இங்கேயே இருக்காங்க...சம்மதத்தை நீங்களே கேட்டுக்கங்க.

*ரவி:* மனம் போல எல்லாம் நடக்கும்போது நாங்கவேறு என்ன சொல்லணும்....

*கார்:* இந்தக் கார்மேகமும்நீலமேகமும் காளமேகமும் சந்திக்கும்போது மேகவிலாசத்தால் யாருக்கு இடியா இருக்குமோ? யாருக்கு மழையா இருக்குமோன்னு நினைச்சேன்!

*கல்:* எல்லாருக்குமே சேர்த்து மகிழ்ச்சியான மழைதான் பெய்யுது....

# விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



# அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.

அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.

எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA



இலக்கியங்களுக்கு

இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்



# மதயானை

ந. பரமசிவம்

வனத்தில் வாழும் யானைகள் மதம் பெற்று மனித உயிருக்கும் பொருளுக்கும் பெருஞ் சேதம் உண்டாக்குவது பலரும் அறிந்ததே. இந்தக் காரணத்தைக் கொண்டு யானை இனம் ஓர் அளவு அழிந்து வரும் அபாய நிலையையும் நாம் உணர்கின்றோம். மதம் கொண்ட யானைக்கும் மத நீர் உடைய யானைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. யானைகளுக்கு மத நிலை ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்தல் அவசியம். வனத்தின் புறச் சூழ்நிலை மாறுதல் காரணமாகவும், உணவுப் பற்றுக்குறைவாலும், வேட்டையாடுபவர் இழைத்த காயத்தாலும், மற்ற யானைகளால் தன் கூட்டத்தை விட்டு வெளியேற்றப்படுவதாலும் யானைகளுக்கு மதம் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் உண்டாகின்றன.

யானைக் கூட்டங்கள் வாழும் பகுதிகளைப் பாதுகாப்பதாலும் சட்டத்திற்கு மாறாக யானைகளுக்கு இன்னல் இழைத்து வேட்டையாடுபவர்களைத் தவிர்ப்பதாலும் யானைகளுக்கு மதம் ஏற்படாது பாதுகாக்க முடியும்.

யானை இருப்பினும், இறப்பினும் விலையுயர்ந்த பொருள். ஆகையால், யானைக் கூட்டங்களைப் பாதுகாப்பதின் மூலம் நாட்டின் வருவாய் பெருகுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. யானை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன். தற்போதைய பொன் விலைக்கேற்றபடி, யானைத் தந்தத்தின் விலையும் ஏறியுள்ளது என்பது ஒரு யானையின் ஜோடி தந்தம் ரூ. 50,000 வரை விலை பெறுகிறது என்பதால் விளங்கும்.

மதம் கொண்ட காட்டு யானைகளால் தாக்கப்பட்டு, காயமடைந்தவர்களையும், எந்தவித மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு முன்னரே இறந்துவிடும் நபர்களைப் பற்றியும் நாள் இதழ்கள் மூலம் அறிந்து வருகின்றோம். இவ்வாறு காட்டு யானைகள் மதம் பெற்று காட்டில் வேலை செய்பவர்களையும், காட்டிற்கு அருகில் பயிர் செய்து வருபவர்களையும், பயிர்களையும் தாக்கி உயிருக்கும், பயிருக்கும் கேடு விளைவித்து வரும் நிலை தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் தவிர்க்க அவ்வாறு மதம் பெற்றுத் திரியும் யானைகளை அடையாளம் குறிப்பிட்டு அவற்றைச் சுடுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அந்த அறிவிப்புக் கிடைத்தவுடன் வேட்டையில் தேர்ச்சி பெற்றவர்கள் துப்பாக்கியின் உதவியால் மத யானையைச் சுட்டு அழிக்கின்றனர். இவ்வாறு மத யானைகள் அழிந்து வரும் நிலையைப் பார்க்கின்றோம். இந்நிலை மேலும் நீடிக்குமானால் காட்டு யானைகள் காலப் போக்கில் குறைந்து ஒரு காலத்தில் யானை இனமே மறைந்து விடுமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

வருங்கால சந்ததியினருக்கு யானையைப் பற்றிப் படங்களின் மூலமாகவோ அல்லது கற் சிலைகள் மூலமாகவோ தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். தந்தத்துக்கு ஆசைப்பட்டு, கயவர்களின் துப்பாக்கிக் குண்டுகள் யானையின் குருதியைச் சுவைக்கத் தவறுவதில்லை. மதம் என்னும் பெயரில் யானைகள் இன்று மறைந்து வரும் நிலையை எண்ணும் போது நாம் வருந்தாமல் இருக்க முடியாது.

மதம் என்னும் வார்த்தையானது யானைக்கு ஏற்படும் மூர்க்க குணத்தையும், மன அமைதி இல்லாத ஒரு நிலையையும் குறிப்பிடும். மதம் பொதுவாக ஆண் யானைகளுக்குத்தான் அதிகமாக ஏற்படுகின்றது. இது அநேகமாக சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்ப அமைகின்றது. மதம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. மதம் பெற்று இறந்த யானைகளை நன்கு உற்று நோக்கிப் பார்த்தால் அதிகமான யானைகள் ஒரு தந்தத்தை உடையதாகவும், மற்றொரு தந்தத்தை இழந்தும், உடம்பில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயங்களோடும், குண்டுகளோடு கூடிய ரணத்தோடும் காணப்படுகின்றன. சில சமயங்களில் மத யானைகளின் வால் நுனி துண்டிக்கப்பட்டும், கால் பாதங்



வனத்தில் யானைகள் கூட்டமாக வாழுகின்றன. ஆண் யானை அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தும் பாதுகாத்தும் வருகின்றது.

களில் ஒன்று அல்லது இரண்டு நகங்கள் விழப்பெற்றும் காணப்படுகின்றன. மதம் கொண்ட யானைகள் தனித்து அலைந்து திரியும் தன்மை உடையன. மத யானைக்கும் (Rogue Elephants), மத நீர் யானைக்கும் (Musth Elephants) பல வேறுபாடுகள் உள்ளன. யானையின் கண்ணுக்கும் காதுக்கும் இடையே சென்னிப் பகுதியில் சிறு துவாரம் காணப்படுகிறது. மதம் என்னும் நீர் இதன் வழியே கசிகின்றது. இது எண்ணெய்யைப் போன்று காணப்படுகின்றது. மத நீர் சுரக்கின்ற காலங்களில் சென்னிப் பகுதி வீக்கமுற்றுத் தென்படுகின்றது. அந்தச் சமயம் மதநீர் கொண்ட யானைகள் மிகவும் மூர்க்க குணம் உடையனவாக இருக்கின்றன. அவை மிக்க வேகமுடையதாகவும், தன்னோடு இருக்கும் மற்ற யானைகளையும் தாக்கித் துன்புறுத்தும் தன்மை உடையனவாக இருக்கின்றன. வேறு ஆண் யானைகளைக் காணும்போது மத நீர் வேகம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மற்ற ஆண் யானையைத் தன் தந்தத்தால் தாக்கி அதன் உடலில் பல ரணங்களை ஏற்படுத்துகின்றது. தந்தத்தின் தாக்குதலால் பலம் குன்றிய மதம் இல்லாத யானை இறக்க நேரிடும். இந்த மதநீர் உற்பத்தி ஒரு மாத கால வரையிலும் நீடித்திருக்கும், பின்னர் குறைந்து குணமடைந்து யானை தனது பழைய நிலைக்கே வருகின்றது. மத நீர் குறைந்ததும் அதன் வேகம் குறைந்து அமைதி அடைகின்றது. மேலே குறிப்பிட்ட வேறுபாடுகளைக் கொண்டு மத யானையையும், மத நீர் யானையையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

யானைக்கு மதம் ஏற்பட்டு அதனால் விளைகின்ற அழிவுகளையும், உயிர்ச் சேதங்களையும் தடுக்கும் பொருட்டு அது மத யானை தான் என உறுதி செய்த பின்னரே அறிவிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றது. அவ்வாறு மதம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். யானைக்கு மதம் வருகின்ற அடிப்படை சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து, அவற்றில் உள்ள குறைபாடுகள் எந்த அளவிற்கு அமைந்துள்ளன என்பதை உணர்ந்து அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்குரிய வழிகளை வகுத்து, சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தினால் யானைகளுக்கு மதம் ஏற்படும் நிலை குறையும்; யானைகளுக்கு ஏற்படும் உயிர்ச் சேதங்களையும் தடுத்து நிறுத்த முடியும். அவ்வாறே அழிந்து வருகின்ற யானை இனத்தையும் பாதுகாக்க முடியும்.

யானைகள் கூட்டமாக வாழுகின்ற காடுகளில் ஒரு யானைக் கூட்டத்தில் ஐந்து முதல் பதினைந்து யானைகள் வரையிலும் உள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது இரண்டு ஆண் யானைகளும், மற்றவை பெண் யானைகளும், குட்டிகளுமாகும். பெரிய ஆண் யானை சாதாரணமாக அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தும், மற்ற யானைகளையும் குட்டிகளையும் பாதுகாத்தும் வருகின்றது. இப்படித் தகுந்த சூழ்நிலையில் இருந்து வரும் யானைக் கூட்டங்களின் சுற்றுப் புறத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டால் அது பெரும் அளவிற்கு யானைக் கூட்டங்களைப் பாதிக்கின்றன. திடீர் மாறுதல் காரணமாக ஆண் யானைகள் தங்கள் கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவை சாதகமான சூழ்நிலை நிறைந்த இடங்களைத் தேடிச் செல்லுகின்றன. இவ்வாறு பிரிந்து செல்லும் யானைகள் சாதகமற்ற சூழ்நிலை அமைப்பாலும், தன் கூட்டத்தின் பிரிவாலும் தனித்துப் பல நாட்கள் காடுகளில் அலையும் நிலை ஏற்படுகின்றது. இந் நிலை நீடித்தால் அதன் மனத்தில் வெறுப்புணர்ச்சிகளும், ஒரு வேகத் தன்மையும் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. பின்னரே மத யானையாக மாறுகின்றது.

சில சமயங்களில் போதிய அளவு தாவர உணவு கிடைக்காத காரணத்தால் பெரிய ஆண் யானைகள் தங்கள் கூட்டத்தை விட்டு உணவு தேடிப் புது இடங்களுக்கு அலைகின்றன. இவ்வாறு தனித்து அலையும்போது பிரிவாற்றாமையாலும், போதிய அளவு உணவு கிடைக்காத காரணத்தாலும் மத யானைகளாக மாறுகின்றன. தான் விலகி வந்த காடுகளில் மறுபடியும் நல்ல தாவர உணவு கிடைப்பதாக இருந்தால் அவை மறுபடியும் தன் இனக் கூட்டங்களுடன் வந்து சேருகின்றன. அந்த யானைகள் மதம் நீங்கி நல்ல நிலையில் வாழ்கின்றன.

உணவு தேடி அலைந்து திரியும் யானை, காட்டிற்கு அருகில் உணவு தானியங்கள் பயிர் செய்யப்படும் வயல்களைக் கண்டதும் தன் பசியைப் போக்குவதற்காக அந்த நிலங்களில் போதுமான அளவு உணவை அருந்துகின்றது. யானை உண்ணும் தானியங்களை விடச் சேதாரம் ஆகும் தானியங்களே அதிகமாகும். யானையைத் தோட்டக்காரர்கள் அவ்விடத்தை விட்டு விரட்டுகின்றனர். யானையை வெளியேற்ற வெடி குண்டு

யானைக் கூட்டத்திலிருந்து பிரிந்த ஆண் யானை பிரிவாற்ருமையாலும், உணவு பற்ருக் குறைவாலும் மற்றும் பல இன்னல்களாலும்காட்டில் தனித்து அலைந்து திரியுமபோது மதயானையாக மாறுகின்றது.





யானையின் கண்ணுக்கும், காதுக்கும் இடையே வட்டத்தினுள் அமைந்திருக்கும் கருமையான புள்ளி மதநீர் சுரக்கும் பகுதி.

களையும், துப்பாக்கிக் குண்டுகளை யும், தீப்பந்தங்களையும் உபயோ கப்படுத்துகின்றனர். இந்த முயற்சியில் உடம்பில் காயம் ஏற் பட்ட யானை காயத்தின் வேதனை யாலும், மற்ற துன்பங்களாலும் நாட்கள் செல்லச் செல்ல மத யானையாக மாறித் துன்புறுத்திய நபர்களையே தாக்க முயற்சி செய் யும். ஜிம் கார்பெட் என்னும் திறமை மிக்க வேட்டைக்காரரும் தமது 'Man Eater of Kumaon' என்னும் நூலில் காட்டுப் புலிகள் மனிதர்களையும், கால்நடைகளை யும் அடிக்கடி தாக்கிப் பெருத்த இன்னல்கள் விளைவிப்பதற்கு மேலே குறிப்பிட்ட அடிப்படை உண்மைகளே காரணம் என்று கூறுகின்றார்.

மேலும் காடுகளில் யானைகளை வேட்டையாடும் நபர்கள் உபயோ கப்படுத்தும் குண்டுகளால் காயம் ஏற்பட்டு அவை பல மாதங்களாக குணமாகாமல் ரணமாக மாறி யானைக்கு எப்போதும் பெரும் வேதனையைக் கொடுத்து வருகின் றது. நீண்ட நாட்கள் அனுபவித் துக்கொண்டிருக்கும் இந்த வேதனை காரணமாக மதயானை யாக மாறுவதும் உண்டு. தன் உடலில் உள்ள ரணத்தின் வேதனை யால் அதன் கண்முன் தென்படும் மனிதர்களைப் பழி வாங்கும் எண் ணத்தில் தாக்க முயலுகின்றது. தனது முயற்சியில் வெற்றியும் பெற்று தன் பகையையும் தீர்த்து கொள்கின்றது. இவ்வாறு யானையை இந்த நிலைக்குக் கொண்டு வருவது மனித இனத் தின் இரக்கமற்றசெயலாகும்.

சில சந்தர்ப்பங்களில் யானைக் கூட்டங்களில் உள்ள ஆண் யானை களுக்கிடையே கூட்டத்தின் தலைமை, இடத்தைப் பெறுவதற் காக அவற்றுக்கிடையே பலப் பரீட்சை ஏற்படுகின்றது. இத னால் ஒரு யானை மற்றொரு யானையைத் தாக்கி அதன் உடலில் பல ரணங்களை ஏற்படுத்துகின்றது அதிக பலம் உடைய யானை மற்ற யானையை அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே துரத்துகின்றது. சில சமயங்களில் அதிகமாகத் தாக்கப்பட்ட யானை இறந்து போவதும் உண்டு. இவ்வாறு சண்டையில் காயம் ஏற்பட்டு விரட்டி அடிக்கப்பட்ட யானை தவித்து அலைந்து திரியும் போது மத யானையாக மாறுகின்றது.

மேலே குறிப்பிட்ட உண்மை களைக் கொண்டு ஆராயுமிடத்து நல்ல நிலையில் வாழ்ந்து வரும் யானைகள் கூட நாளடைவில் இன்னல் தரக் கூடிய சூழ்நிலைக் கேற்றவாறு மத யானைகளாக மாறக் கூடும். இதற்கு முக்கிய காரணம் மனிதனே என்பதில் சந்தேகமில்லை.

யானைக் கூட்டங்கள் அதிகமாக உள்ள காடுகளை சரணாலயங்களாக மாற்றி அமைக்க வேண்டும். அந்தச் சரணாலயக் காடுகளில் மரம் வெட்டும் பணிகளும், செயற்கை முறையில் தோட்டங் கள் உற்பத்தி செய்யும் வேலை களும் நடைபெறாமல் இருத்தல் அவசியம் அக் காடுகளில் வேட்டையாடுதல், மோட்டார் வாகனங்களைச் செலுத்துதல் ஆகியவற்றையும் தடை செய்தல் வேண்டும். இவ்வாறு சரணாலயங் களை அமைத்து, பாதுகாப்புக் கொடுப்பதின் மூலம் யானைக் கூட்டங்களுக்குத் தகுந்த சாதக மான சூழ்நிலையை அமைக்க முடி கின்றது. அவைகளும் இந்தச் சூழ்நிலையை விட்டு வெளியே செல்லாமல் அந்தக் காடுகளிலே சுற்றித் திரிந்து வாழ்கின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள "யானைப் பாதுகாப்புச் சட்டத்தை" மறு பரிசீலனை செய்து பாதுகாப்பு அடிப்படை யில் பல விதி முறைகளைச் சிறப் பாகச் செயல்படுத்த ஆவன செய்தல்வேண்டும். சட்டத்திற்கு விரோதமாக யானைகளை வேட் டையாடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க விதி முறைகளை மாற்றி அமைத்தல் அவசியம்.

இவ்வாறு பாதுகாப்பு அளிக் கும்போது யானைக் கூட்டங்களில் ஆண் யானைகளுக்கு அதிக மதம் ஏற்படாது. அவற்றின் இனப் பெருக்கமும் அதிகரிக்கத் தொடங் கும். யானைகளின் பெருக்கம் அபிவிருத்தி அடையும்போது அவற்றைப் பிடித்து விற்பனை செய்யலாம்.



யானைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரு கின்றது. கோவில்களுக்கும், குழந்தைகள் பூங்காவிற்கும், மிருகக் காட்சிச் சாலைகளுக்கும், அயல் நாட்டவருக்கும், பல நிறு வனங்களுக்கும் தேவைப்படுகின் றன. இந்த விற்பனை மூலம் அரசிற்குக் கணிசமான வருவாய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அதே வேளையில் சரணாலயங்களின் மூலமாக வெளிநாட்டு அன்னியச் செலாவணியும் கிடைக்க ஏது வாகும். இந்த அடிப்படையில் நம் அரசு யானைகளுக்குப் போதிய பாதுகாப்பு கொடுப்பதன் மூலம் யானைகளின் எண்ணிக்கை அதி கரிக்கும், வருவாயும் உயரும்

# பட்டிமன்றப் பாதை

கோவை இளஞ்சேரன்

**சென்ற இதழ்த் தொடர்ச்சி :**

தொன்மைப் பூம்புகார் நகரில் இந்திர விழா ஆண்டுதோறும் நிகழ்ந்தது. விழா பலவகைச் சிறப்பு நிகழ்ச்சிகளால் நிறைந்தது. விழா அறிவிப்பில் பலவகை அறிஞரும் கலைஞரும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப்பட்டனர். அவ்வறிவிப்பில்,

''பட்டி மன்றத்துப் பாங்கறிந் தேறுமின்'' எனப் பட்டி மன்றத்தாரும் அழைக்கப்பட்டனர். இப்பட்டி மன்றங்கள் சமயத்துறைப் பட்டி மன்றங்களாகவே அமைந்தன. சில நேரங்களில் இக்கருத்துப் போர் பூசலாகிவிடுவதுண்டு. சினங்கொண்டு கடுமையாகத் தாக்கிக் கொள்வதும், வருகைதந்தோர் கலாட்டா செய்வதும் உண்டு. அதனால், அறிவித்தவன்,

''செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்'' என்றும் அறிவிக்க நேர்ந்தது. இவற்றை அறிவிக்கும் மணிமேகலைக் காப்பியத்தில் அக் காப்பியத் தலைவி மணிமேகலை துறவுகொண்டு சமயக் கணக்கர் பலரது கருத்தை ஆராய்ந்தாள்:

''நிகண்ட வாதியை, நீஉரை; நின்னால்
புகழுறுந் தலைவன் யார்? நூற்பொருள்யாவை?
அப்பொருள் நிகழ்வும் கட்டும் வீடும்
மெய்ப்பட விளம்பு''—

என்று நிகண்ட வாதியுடன் வாதிடுகின்றாள். இதுபோன்றே பற்பல சமயத்தவருடன் கருத்துப்போர் நிகழ்கின்றது. இப்போர், மன்று கூடி, நடுவர் அமர நிகழவில்லையாயினும் கருத்துப்போர் என்னும் அளவில் பட்டி மன்றத்தின் நிழலாடுகின்றது.

மணிமேகலைக்குப் பின்னர் எழுந்த குண்டலகேசி என்னும் காப்பியத்தின் தலைவி குண்டலகேசியின் துறவு வாழ்வு முழுதும் பட்டிமன்ற வாழ்வாகவே அமைந்தது. அவள் சமண மதத்தைத் தழுவி நின்றபோது சாரிபுத்தருடன் கருத்துப் போரிட்டுத் தோற்றாள். அதனால் புத்த மதத்தைத் தழுவிச் சமண சமயத்தைச் சார்ந்த நாதகுத்தர் என்பவருடன் ஆவனம் என்னும் நகரில் கருத்துப் போரிட்டு அவரைத் தோற்கடித்தாள். சைவ, வைணவ மதத்தாருடனும் போரிட்டு வென்றதாக அந்நூல் கூறுகின்றது.

இக் காப்பியத்தை மறுப்பதற்காகவே எழுதப்பட்ட நீலகேசி என்னும் காப்பியம் ஒரு கருத்துப் போர்க் காப்பியமாகவே அமைந்துள்ளது. அக்காப்பியத்தின் சருக்கங்கள் குண்டலகேசி வாதச் சருக்கம், அருக்க சந்திர வாதச் சருக்கம், மொக்கல வாதச் சருக்கம், புத்த வாதச் சருக்கம், ஆசீவக வாதச் சருக்கம், சாங்கிய வாதச் சருக்கம், வைசேடிக வாதத் சருக்கம், வேத வாதச் சருக்கம், பூத வாதச் சருக்கம் என்பன. எனவே இக்காப்பியம் வாத-கருத்துப்போர்-பட்டி மன்றக் காப்பிய நோக்குடனே எழுதப்பட்டதை அறியலாம்.

இம்மூன்று காப்பியங்களையும் பட்டி மன்ற நினைவுடன் நோக்கின் சமயத்துறையில் பட்டி மன்ற நிகழ்ச்சி எத்துணை அளவில் வளர்ந்து நிறைவு பெற்றது என்பதை உணரலாம்.

மதுரையில் தடாதகைப் பிராட்டியார் ஆண்டதைக் கூறும் திருவிளையாடற் புராணம் அப்பிராட்டியார் நாள் நிகழ்ச்சிகளைக் கண்டு வருங்கால்,

''வாதிகள் வாதஞ் செய்யும்
கோட்டிமேல் மகிழ்ச்சி கூர்ந்'' ததைக்

குறிக்கின்றது. அந்நூலில் முன்னர் நாம் கண்ட இசைப்பட்டி மன்றத்தினைக் கூறும் பகுதி ''இசைவாது வென்ற படலம்'' என்று பட்டி மன்றக் குறியுடன் அமைந்துள்ளது.

மதுரையில் திருஞானசம்பந்தருக்கும் சமணருக்கும் ஏற்பட்ட சமயப் பூசல் ஒரு பட்டி மன்றத்தின் நிழலாக அமைந்தது. சைவ சமய குரவரான திருஞானசம்பந்தர் வாது செய்வதை விரும்பாதவராயினும் இப்பூசலில் வாதுக்கு இசைந்தார். சமணர் வாதுக்கு அழைக்கும் அறைகூவலாகச் சம்பந்தர் சைவ மடத்திற் புகும்போது தடுத்து மறித்தனர். இவ்வாறு மறித்தது அறைகூவலுக்குப் பட்டி மண்டபத்தை அடைத்த வழக்கு போன்றதாயிற்று. மன்னன் சைவனானதால் அவன் அவையில் வாதிட மறுத்து நகர்ப்புறத்திற்கு அழைத்தனர். அங்கு அவரவர் சமய மந்திரத்தினை ஓலையில் எழுதித் தீயில் இட்டனர். சமணர் ஓலை எரிந்தது. சைவர் ஓலை எரியாதிருந்தது. சமணரோ இஃதொரு 'நெருப்பு வித்தை என்று ஏற்க மறுத்தனர். மீண்டும் ஏடெழுதி வைகையாற்றில் விட விரும்பிய சமணர், ''நீரினில் இடுவோம்; அதில் வென்றவர்க்குத் தோற்றவர் என்றுமே அடிமையாவது'' என்று ஒறுப்பையும் விதித்தனர். சம்பந்தரோ,

''..நுமக்கேற்ற தண்டம் இதுவோ என்று
வடிவான் நிரைத்த கழுமுனையில் இடுவாம்
அதுவே வழக்கென்றார் ''

சமணரும் அதற்கிசைந்தனர். இருவரும் தத்தம் ஏடுகளை வைகையில் இட, சைவ ஏடு எதிர்த்தேறியது; சமணர் ஏடு நீரோடு ஓடியது. சமணரும்,

''....யாங்களும்
இன்று தோற்றோம்; எமையீண்டு நீரே
வென்றீர் ''

என்று தோல்வியை ஏற்றனர்.

சம்பந்தர் ''கழுவில் ஏற வேண்டா; சைவ மதத்தைத் தழுவுக'' என்றார். சமணரோ ''சிறியவனே, நீ எவ்வாறு எங்கட்கு அடாத மொழி சொல்வது'' என்று,

''மதத்தினில் மானம் மிக்கார்
தாங்களே வலிய (கழுவில்) ஏறினர் ''

இவ்வாறு நிகழ்ந்த பூசலில் பட்டி மன்றம் சொல்லாடலாக நிகழவில்லையென்றாலும்,

''வாது செய்து அடங்கத் தோற்ற''

''வாது செய்திர்''

''வாதினால் வேறும்''

''வாதஞ் செய்யப் போதுக''—என்றெல்லாம் வாதமாகக் குறிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்குப் பின் சம்பந்தர் ''வாது வென்றவர்'' என்று சிறப்பிக்கப்பட்டார்.

எனவே, இஃதும் ஒருவகைப் பட்டி மன்ற நிழலாகத் தொடர்ந்தது. இந்நிழல் சமணர் கழுவேறிய கரும்புள்ளி கொண்டது. நக்கீரர் தொடர்பில் கடுமையும் கொடுமையும் பட்டி மன்ற வளர்ச்சியில் இந்த அடுமையும் (கொலையும்) பங்கு கொண்டது.

இங்குக் காட்டப்படும் கதைக் கருத்துக்கள் யாவும் அவ்வவ்வாறே நிகழ்ந்தனவாகக் கருதி கொள்ளப்பட்டன அல்ல. அவ்வக் காலத்து நிலவிய கருத்துக்களை அவ்வவ்வாசிரியர் கொண்டு காட்டியனவாகவே கொள்ளப்பட்டுள்ளன.

பட்டி மன்றப் பாதையில் திருமால் மதத்தினரும் நடைபழகினர். அம்மதத்தில் புரட்சி பெரியாராய்த் தோன்றிய இராமாநுசர்,

வாதில் வென்றான் எம் இராமா
நுசன் எம் மதிக்கடலே ''— என்று இராமாநுச நூற்றந்தாதி (58)யில் போற்றப்பட்டார். இராமாநுசர் தோன்றியபின் ''ஆகம வாதியரும், தற்கச் சமணரும், சாக்கியப் பேய்களும், சைவச் சோம்பரும், சூனிய வாதரும் அழிந்தனர்'' என்று அந்நூல் பாடுகின்றது. இராமாநுசர் வாதியரைத் தலையெடுக்கவொட்டாது சொற்போராடி வென்றதாக அந்நூல் கூறுகிறது. அவர்''மறைவாதி'' எனப்பட்டார்.

அரிதாசர் என்னும் திருமாலியப் பெரியார் ''இரு சமய விளக்கப் பாடல்கள்'' எனச் சைவ, திருமாலிய மதக் கருத்துக்களை மோத வைத்து ஒரு நூலை எழுதினார். அதில் சைவத்திற்கு ஆகமவல்லி என்றும், திருமாலியத்திற்கு ஆரணவல்லி என்றும் இரு மங்கையரைப் படைத்து மொழிந்து அவர்களை மாறி மாறிச் சொல்லாட வைத்துள்ளார். இதனை ஒரு சொற்போர் நூல் எனலாம்.

காலந்தோறும் ஆங்காங்கு சேதுபதிகள் அவை, மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலிய அவைகளில் கருத்துப் போராம் பட்டி மன்றப் படிவங்கள் தோன்றிக்கொண்டே வந்துள்ளன. வள்ளலார் திருவருட்பா பற்றிய கருத்துப் போர் நிகழ்ந்ததையும் அறிகின்றோம்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்களும் கம்பராமாயணம் பற்றிக் கருத்துப் போரிட்டது பட்டி மன்றப் பாதையில் நம் கண்ணுக்கு நேர்வந்த காட்சி.

இக்காலத்தில் சொற்பொழிவு மேடையின் பருவம் பட்டி மன்றப் பருவமாகவே நிகழ்வதைக் காண்கின்றோம்.

கருத்துப் போராகப் பிறந்த பட்டி மன்றம் சமயப் போராக நடைபோட்டு, இன்று கவர்ச்சிப் போராக ஓடிக்கொண்டுள்ளது. காலந்தோறும் இடம்பெற்ற இப்பட்டி மன்றம் பல முனைகளில் நிகழ்ந்தாலும் பிற்காலத்தை ஒதுக்கி இதன் நிகழ்ச்சிக்குப் பொதுவான நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்க முடிகின்றது.



அந்நிகழ்ச்சி நிரல்,
அறைகூவல்—பட்டி மன்ற அடைப்பு;
அறைகூவலை ஏற்றல்—பட்டி மன்றத் திறப்பு;

அவை கூடல்—நடுவர் அமைதல்;
நெறியறிவிப்பு;
கருத்துப்போர்;
தீர்ப்பு;

அவையோர் வழிமொழிதல்;
சிறப்பும் ஒறுப்பும்
என அமையும்.

இந்நிகழ்ச்சிப் பட்டியலிலுள்ள ஒவ்வொன்றும் நடைமுறைப்பட்டபோது சிறு சிறு வேறுபாட்டைக் கொண்டது. ஆயினும், ஒவ்வொன்றிற்கும் நெறியும் விதியும் இருந்ததைப் பல வகை நூல்களும் அறிவிக்கின்றன. நிகண்டுகள், இலக்கணங்கள், உரைகள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், பழமொழிகள், நாட்டு வழக்குகள், செவி வழிச் செய்திகள் ஆகிய பலவற்றிலும் அள்ளித் தெளித்தது போன்று பட்டி மன்ற நெறிகளையும் விதிகளையும் விளக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் காண முடிகின்றது. அவற்றையெல்லாம் பொறுக்கி எடுத்து ஆய்ந்து தொகுத்தால் பட்டி மன்றத்திற்கு நீண்ட பெரும் வரலாறு கிடைக்கும். அவ்வரலாறும் பின்வரும் பத்து அதிகாரங்களாக அமையும்:

1. சொல்லாடல் - சொற்பொழிவு - சொற்போர்.
2. பட்டி
3. பட்டி மண்டபம்
4. பட்டியாளன்—வாதி.
5. அறைகூவல்.
6. பட்டி அவை.
7. பட்டி நெறி.
8. பட்டி நிகழ்ச்சி.
9. தீர்ப்பு.
10. தீர்ப்பின் விளைவு.

இவற்றிற்கு மேலும் ''வாது ஒரு தீது'' என்ற கடைகாப்பையும் அமைக்கும் சூழலும் உண்டு. இவ்வரலாற்றைக் காண்பதால் பல தமிழ் மரபுகளையும் காலப்போக்கில் வளர்ந்த—தளர்ந்த கருத்துப் போக்கையும் உணரலாம்.

# பாஞ்சாலங்குறிச்சியை அகழ்வாய்ந்தோம்

இரா. நாகசாமி



"வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி'' என்று வீரமுழக்கம் செய்து, அன்னியனான ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து விடுதலை வேள்வித் தீயில் தன் ஆவியை விட்ட பாஞ்சாலங்குறிச்சிக் குரிசில் வீரபாண்டிய கட்டபொம்மனை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அம்மாவீரன்வாழ்ந்தஇடத்தை ஆங்கிலேயர் தகர்த்துத் தரை மட்டமாக்கினர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை ஆங்கிலேய வீரன் ஆலன் என்பான் கைப்பற்ற முனைந்து தோல்வியுற்றான். நெல்லை மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் என்பான் கட்டபொம்மனைச் சதி செய்து கைது செய்ய முயன்றான். ஆனால் வீரன் கட்டபொம்மு வெற்றி வாகை சூடினான். ஆனால் 1799-ல் கர்னல் பானர்மென் என்பான் தலைமையில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. பாஞ்சாலக்குறிச்சி வீரர்களின் ஆற்றலின் முன்னர் ஆங்கிலேயர் பலர் ஆவியிழந்தனர். இப்போரில் வீழ்ந்த ஆங்கிலேயர்களின் கல்லறைகள் இன்னும் ஒட்டப்பிடாரத்திற்கு அண்மையில் இப்போருக்குச் சாட்சியாக விளங்குகின்றன.

மாவீரன் கட்டபொம்மன் சூழ்ச்சியால் கைது செய்யப்பட்டான். கயத்தாற்றில் தூக்கு மேடையில் வீரன் ஆவி துறந்தான். இப்போர் முடிந்த ஓராண்டுக்குள் கட்டபொம்முவின் வீரத் தம்பி ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பழுது பார்த்துத் தலைமையேற்றான். 1801-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சி மீது மறுபடியும் படையெடுத்தனர். ஊமைத்துரை நடத்திய வீரப் போரில் ஆங்கில வீரர் பலர் அடிபட்டு மாய்ந்தனர். அவ்வாறு அடிபட்டு வீழ்ந்த 45 வீரர்களுடைய கல்லறைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அருகிலிருக்கின்றன. ஆயினும் கோட்டை வீழ்ந்தது. இம்முறை, ஆங்கிலேயர் கோட்டையையும் அரண்மனையையும் பீரங்கி கொண்டு தகர்த்துத் தரை மட்டமாக்கினர். கோட்டை வீழ்ந்தபோது அங்கு இருந்த பொருள்களெல்லாம் சூறையாடப்பட்டிருக்க வேண்டும். சுமார் 35 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் இருந்த கோட்டைப் பகுதிகள் மண் மேடாக இருந்து வந்தது. அண்மையில் கட்டபொம்முவினுடைய குல தெய்வம் ஜக்கம்மா தேவிக்கு கோட்டை மேட்டின் மத்தியில் ஒரு



அந்தப்புரம், பாஞ்சாலங்குறிச்சி



பாஞ்சாலங்குறிச்சியில் கிடைத்த கண்ணாடிப் புட்டிகள்.



கோயில் எடுக்கப்பட்டது. கோட்டைமேடு முழுவதும் புதர்கள் மண்டிக் கிடந்தன. இங்குமங்குமாக ஒரு சில இடங்களில் சுவர்களின் அடிப்பகுதிகள் காணப்பட்டன. புறத்தே வாழும் மக்களால் கோட்டைப் பகுதிகளில் இருந்து மண் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டை மேட்டை அகழ்ந்து அரண்மனைப் பகுதிகளை வெளிக் கொணர அரசு ஆணை எண். எம்.எஸ். 1653, கல்வித் துறை, நாள் 26-9-67-ல் ரூ. 8,500/-க்கு ஆணையிட்டது.

மேற்கண்ட அரசு ஆணையின் படி வேலை 24—8—68-ல் துவங்கப்பட்டது. கோட்டை மேட்டிலிருந்த புதர்கள் அகற்றப்பட்டன. ஜக்கம்மாள் கோயிலுக்கு அருகில் தென் புறத்தில் அகழ்வாய்வு தொடங்கப்பட்டது. அவ்விடத்திலேயே அரண்மனையின் அடிப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.



பாஞ்சாலங்குறிச்சியில் அகழ்வாய்ந்த கட்டபொம்மன் கோட்டையிருந்த இடத்தின் பக்கத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் கட்டபொம்மன் கோட்டை.

நாளோலக்க மாளிகையும் கலியாண மண்டபமும், அடுக்களையும், வசிக்கும் அறைகளும் சூழ விளங்கிய அரண்மனையின் அடிப்பகுதி வெளிப்பட்டது. தென் கோடியில் கிழக்கு நோக்கிய வாயில் காணப்பட்டது. வாயிலின் இரு மருங்கிலும் அறைகள் காணப்பட்டன. உள்ளே நுழைந்ததும் வடபுறத்தில் 1.5 மீட்டர் ஆழமுள்ள சதுரமான குழி ஒன்று காணப்பட்டது. குழியின் பக்கங்கள் சுண்ணும்புச் சாந்தால் பூசப்பட்டு இருந்தன. தானியங்களைக் கொட்டிவைப்பதற்கு இவ்வறை உபயோகிக்கப்பட்டு இருக்கலாம். இங்கிருந்து ஒரு சரிவான வழியின் மூலம் நாளோலக்க மாளிகையை அடையலாம்.

நாளோலக்க மாளிகையின் மேல் புறம் செங்கற்கலால் கட்டப்பட்ட உயர்ந்த பீடம் ஒன்று காணப்பட்டது. அதன் முகப்பில் விளக்கு வைப்பதற்கு பிறைகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. அப்பீடத்தின் அடிப்பகுதி மிக அழகாகச் சுதை வேலைப்பாட்டால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மரத் தூண்களைத் தாங்குவதற்கு கல்லாலான அடிப்பகுதிகள் இரண்டு பீடத்தின் மேல் காணப்பட்டன. பீடத்தின்



பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் கிடைத்த உடைந்த மண்பாண்டங்கள்.



பாஞ்சாலங்குறிச்சியை உடைத்த பீரங்கிக் குண்டுகள்.

மேல்பகுதி சதுரமான செங்கற்களால் பாவப்பட்டு சுண்ணும்புச் சாந்து பூசப்பட்டுஇருந்தது. இதன் ஒரு பகுதியில் சிலர் புதையல் தேடி குழி தோண்டியிருந்தனர். இதைச் சுற்றிலும் இருந்த சுவர், சுதை பூசப்பட்டிருந்தது. இங்கு வலப்பக்கச் சுவரில் ஆங்கிலேயர் பீரங்கியால் தாக்கியபோது வந்து பாய்ந்த இரும்பாலான பீரங்கிக் குண்டு சுவரில் பாய்ந்த நிலையில் காணப்பட்டது. இப்பகுதியில் இருந்த இடிபாடிகளை நீக்கியபோது சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சுதை வேலைப்பாடுகளும், வண்ணம் பூசப்பட்ட சுதை காரைகளும் பெருவாரியாகக் கிடைத்தன. இப்பகுதியில் காணப்பட்ட ஒரு காரைத் துண்டில் வண்ணமுகம் காணப்பட்டது. வெளியான பகுதியின் ஓரங்களில் உயர்ந்த திண்ணைகளும் மண்டபத்தை நோக்கி அமரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் கிழக்கிலும் தெற்கிலும் இருந்த திண்ணைகள் சற்று உயரமாகவும், வடபுறம் இருந்த திண்ணை சற்று தாழ்வாகவும் அமைக்கப்பட்டு, திண்ணைகளின் ஓரங்களில் மரத் தூண்களைத் தாங்கியகல்லாலான அடிப்பகுதிகள் உரிய இடங்களில் இருந்தன.

திண்ணைகளும், தரைப்பகுதியும் அரைத்த வெண்மையான சுண்ணும்புச் சாந்தினுல் பூசப்பட்டிருந்தன. வடகிழக்கில் ஓர் அறை காணப்பட்டது. அவ்வறைக்குச் செல்லும் வாயில் நிலையும் காணப்பட்டது. நாளோலக்க மாளிகையிலிருந்து கழிவு நீர்ப் பாதை



பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் முன்னேர் உருவங்கள்.

ஒன்று இவ்வறையின் வழியாக பூமியினடியில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வறையின் தரை வெறும் சுண்ணும்புச் சாந்தால் பூசப்பட்டிருந்தது. அறையின் ஒரு புறத்தில் கை கால் கழுவ திட்டு ஒன்று அமைக்கப் பெற்றிருந்தது. நாளோலக்க மாளிகையில் இருந்து அதையொட்டி வடப் புறத்தே கல்யாண மண்டபம் ஒன்று நடுவில் உயர்ந்த சதுரமான தெற்றியும், சுற்றி நான்கு புறமும் ஓடும் திண்ணைகளும் அவற்றின் புறத்தே அமைக்கப்பட்டிருந்த அறைகளும் உடையதாகக் காணப்பட்டது. நடுவில் இருந்த தெற்றி வெற்று மண்ணுலானது. சுற்றிலும் சுண்ணும்புச் சாந்து பூசப்பட்டிருந்தது. மேல் பகுதி இடிபாடுகளினுல் சேதமடைந்து இருந்தது. கிழக்குப் புறத் திண்ணையின் அருகே நீர் வடியும் பாதை அமைக்கப்பட்டிருந்தது. திண்ணைகளில் ஏறுவதற்கு ஆங்காங்கே கருங்கல் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளின் ஓரங்களில் மரத் தூண்களைத் தாங்கும் கல்லால் ஆன அடிப்பகுதி ஆங்காங்கு வைக்கப்பெற்று இருந்தன.

கல்யாண மண்டபத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு வாயில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மரக் கதவுகளும், நிலைகளும் இருந்திருக்க வேண்டும். அவற்றைப் பிடுங்கி யெடுத்த தடயங்கள் காணப்பட்டன. இவ்வாயிலுக்கும் வடபால் கிழக்கு மேற்காக சில அறைகளும் காணப்பட்டன. அவற்றிலொன்று அடுக்களையாக இருந்திருக்க வேண்டும். அடுப்பெரித்த சாம்பல்களும், கலங்கள் வைக்கும் திட்டுகளும், கை கால் கழுவும் பகுதிகளும் அங்குக் காணப்பட்டன. அரச மாளிகையிலிருந்து சுமார் 5 மீட்டர் மேற்கில் மற்றும் ஒரு பெரிய கட்டடத்தின் அடிப்பகுதி காணப்பட்டது. நடுவில் தாழ்வாகவும் சுற்றிலும் உயர்ந்த திண்ணைகளோடும் மரத் தூண்களால் தாங்கப்பட்ட மேல் கட்டடங்களோடும் இக் கட்டடம் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான தடயங்கள் கிடைத்தன. தாழ்



கோட்டை கட்டும் பணி நடைபெறுகிறது.

வான நடுப் பகுதியில் உயரமான நான்கு மரத் தூண்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றைத் தாங்கிய கல்லால் ஆன அடிப் பகுதிகள் இன்னும் இருக்கின்றன. இவற்றைச் சுற்றிலும் அறைகள் காணப்பட்டன. இக் கட்டடத்தின் நுழைவாயில் தெற்கு நோக்கி இருந்தது. தென் புறத்தில் வாயிலின் இரு மருங்கிலும் திண்ணைகள் இருந்தன. திண்ணைகளின் அடிப் பகுதி அழகிய சுதை வேலைப்பாடுடன் திகழ்ந்தது.

வடபுறக் கோடியிலிருந்த ஒரு கிணறு தூர் எடுக்கப்பட்டது. சில பீரங்கிக் குண்டுகளும், பீர் புட்டிகளும் கிணற்றினுள் காணப்பட்டன. அரச மாளிகையின் கிழக்கில் கருங்கல்லால் ஆன தறியும் கரடு முரடமான கற்கள் பாவிய கட்டும் தறியும் காணப்பட்டன. இது யானை கட்டும் தறியாக இருக்கலாம். இக் கட்டுத் தறியின் வடக்கே தெற்குநோக்கிய கட்டடம் ஒன்றுகாணப்பட்டது இக்கட்டடத்தின் வட கோடியில் உயர்ந்த பீடமும், நடுவில் சதுரமான தூண்களின் அடிப் பகுதியும் காணப்பட்டன.


நினைவிருக்கட்டும்
தமிழரசு
சிறுகதைப் போட்டி
முடிவு நாள்
1-9-74


இக்கட்டடத்தின் அமைப்பைக் கண்டால் இது ஒரு கோயில் போலக் தோற்றமளிக்கிறது.

இவை தவிர கோட்டை மேட்டில் பல சிறு கட்டடங்களின் பகுதிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இக்கோட்டையின் பகுதிகளில் அகழ் வாய்ந்தபோது பல மட் கலங்களும், கருங்கல்லாலும், இரும்பாலுமான பீரங்கிக் குண்டுகளும், அழகிய சுதை வேலைப்பாடுகளும், ஆங்கிலேயர்களின் பீங்கான் தட்டுகளும், மண் விளக்கும், சில மண் பாவைகளும் கிடைத்தன. அரச மாளிகையில் நாளோலக்க மாளிகையும், கல்யாண மண்டபமும் சேதமடைந்த பகுதிகளில் சுண்ணாம்புக் காரையாலும், வெள்ளைச் சிமெண்டினாலும் பூசப்பட்டு வெய்யிலிலும், மழையிலும் பாழடைந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. மண்ணாலான தரைப் பகுதிகள் வாரமொரு முறை அலகிட்டு, மெழுகிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கோட்டை மேட்டின் கிழக்குக் கோடியில் புதர்களின் நடுவில் பல வீரக் கற்கள் காணப்பட்டன. இவற்றில் நாயக்க வீரர்கள் தங்கள் பெண்டிர் சூழ வீற்றிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இச் சிலைகள் அனைத்தும் கட்டபொம்முவின் முன்னோர்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன. இவை அனைத்தும் ஜக்கம்மா கோயிலுக்கு அருகில் கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் குறிப்பு உள்ள ஒரு பலகை பொருத்தப்பட்டு உள்ளது.


ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072

## இலவசக் கல்வி போதனை

**E. குரூப் வகுப்புகள் ஆரம்பம்: 13—8—1974**

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்-பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B.A., B. Com., B. Sc.,- March 1975 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L., M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B.Sc., (S. S. L. C. (அ). S. S. C. ஆ). மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்) 4. போபால்-ஆந்திரா-கர்னடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 5. A.C.B.I.( London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. (I.M.C. S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்) 7. டெலிபோன் ஆப்ரேட்டர் - டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம் 12. போஸ்ட்மென் 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-74) 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER, D.Com., B.Com., B.Com (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-பிப்ரவரி தேர்வில் கலந்து கொள்ளலாம்) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாஸிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் தபால்கல்வி ஸ்தாபனம்

**Affiliated by I. A. & A. I. S. Educations & Com. University, New Delhi.**

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்**

ரிஷிவந்தியம் S.O:, தென்னாற்காடு மாவட்டம் — தமிழ்நாடு.

கிளைகள்: சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

# கேளுங்கள்? கொடுக்கப்படும்!

**வினா:** எனக்குச் சுமார் 7 ஏக்கர் வளமான நஞ்சை நிலங்கள் உள்ளன. அந்நிலத்திற்கு ஒரு 5 எச்.பி. மோட்டார் பம்பு செட்டும், கிணறும் உள்ளன. கிணற்றின் ஆழம் 5 கெஜம் (முழுவதும்). ஆனால் கிணற்றில் நீருக்கே பஞ்சமில்லை.

சொர்ணவாரி, நவரை போன்ற இரு பட்டங்களில் அந் நிலங்களில் நஞ்சையில் நெல் விதைத்து அக் கிணற்றில் தண்ணீர் பாய்ச்சினால் நெல்லின் விதை முளைகள் யாவும் கருகிவிடுகின்றன. நஞ்சையில் நடவு போட்டால் பச்சை கட்ட சுமார் 20 நாட்கள் ஆகின்றன. ஏகப்பட்ட நடுவுகள் (நாற்றுக்கள்) இறந்து விடுகின்றன.

இருப்பினும் நான் அந்நிலங்களில் ஐ. ஆர். 20, ஐ. ஆர். 8, ஆடுதுறை-27 போன்ற நெல் வகைகளைத் 'தமிழரசு' சிபாரிசு செய்யும் அளவு தொழு உரம், இராசயன உரம் இட்டு பயிர் செய்கின்றேன். ஆனால் மகசூல் மிகவும் குறைந்து விடுகின்றது. எனவே, நிலத்தின் மண்ணைப் பரிசோதித்ததில் மண் வளம் உள்ளது என 'நிரூபிக்கப் பட்டது. ஆனால் நான் இதுவரை அக்கிணற்று நீரை பரிசோதனைக்கு அனுப்பவில்லை.

மேலும், அக்கிணற்றில் சுண்ணும்புப் பாறைகள் அதிக அளவில் உள்ளன. அச்சுண்ணும்பினால் நீர் பாதிக்கப்படுகிறது என்ச் சிலர் கூறுகின்றனர். இன்னும் கிணற்றை ஆழப்படுத்தினால் அடியில் ஆற்று மணல் போல் மணலாக உள்ளது.

எனவே், மேற்படி கிணற்று நீரை எங்கு சென்று பரிசோதிப்பது? அல்லது கிணற்றில் போரிங் வைத்து மிக ஆழப்படுத்தி அதிலுள்ள நீரை எடுத்துக் கொண்டு விவசாயம் செய்யலாமா? அவ்வாறு செய்தால் பயிர் நன்கு வளர்ச்சியடையுமா? கிணற்றில் சுண்ணும்புப் பாறைகள் இருப்பதால், பயிர்களும் பாதிக்கப்படுமா? நீரின் வளம் பாதிக்கப்படுமா? இவைகட்கு விளக்கமான பதில்களை தாங்கள் தயவு செய்து கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—எஸ். நரசிம்மன்,
ஆவணியாபுரம் (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, தங்கள் கிணற்று நீரில் பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் சில வகை உப்புக்கள் இருக்கும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. மண் பரிசோதனையில், தங்கள் மண், வளம் உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளீர்கள். ஆகவே, தாங்கள் கிணற்று நீரையும் உடனே பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். கிணற்றில் உள்ள சுண்ணும்புப் பாறையில் உள்ள உப்புக்களே தண்ணீரில் கரைந்து பயிருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும். அவை என்ன உப்பு? எந்த அளவில் உள்ளது? அதைப் போக்கும் முறை என்ன என்பதை அறிய கிணற்று நீரைப்பரிசோதித்துப் பார்ப்பதே சிறந்தது.

வட ஆர்க்காடு மர்வட்டம் குடியாத்தத்திற்கு அருகில் உள்ள மேலாலத்தூரில் ஒரு மண் பரிசோதனை நிலையம் உள்ளது. அந் நிலையத்திற்கு தாங்கள் ஒரு முறை நேரில் சென்று, அங்குள்ள உதவி மண் இரசாயன வல்லுநர் (Assistant Soil Chemist) அவர்களிடம் முழு விவரத்தையும் கூறி, அவர் கூறும் வகையில் தங்கள் கிணற்று நீரின் மாதிரியைக் கண்ணுடி பாட்டிலில் எடுத்துச் சென்று கொடுத்தால், பரிசோதனைச் செய்து பார்த்துத் தங்களுக்குத் தகுந்த பரிந்துரை வழங்குவார். தாங்களுக்குக் கிணற்றுத் தண்ணீர் ஒரு பிரச்னையாக இருப்பதால், நேரில் சென்று உடன் தண்ணீரைப் பரிசோதித்து அறிந்திடுவதே நல்லது. போக வர செலவு ஆகுமே என்று பார்த்தால், உடனடியாக தகுந்த நிவாரணம் காண முடியாது. எனவே, மேலாலத்தூரில் உள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு நேரில் சென்று விவரம் அறிந்து, உதவி மண் இராசயன வல்லுநர் கூறுவது போல் செய்வதே சிறந்தது. இது தொடர்பாக உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அல்லதுஉங்கள் ஊர் நல உதவியாளர் ஆகியவர்களது உதவியையும் தாங்கள் கேட்டுப் பெறலாம்.

**வினா:** களர் நிலங்களில் எந்த ரக நெல் நல்ல பலன் தரும்? எந்தெந்த பருவத்தில் பயிர் செய்தால் நல்ல விளைச்சல் தரும்? பொதுவான உரச் சிபாரிசு என்ன? களர் நிலங்களில் தக்கைப் பூண்டு பயிர் செய்து எத்தனை நாளில் வயலில் மிதிக்க வேண்டும்? மேலுரமாக எந்த உரத்தில் எவ்வளவு உரம் இட வேண்டும்?

—தா. வரதராஜுலு,
த/பெ. தாசு நாயுடு,
திருமலைக் கிராமம்,
காளப்பநாயக்கன்பட்டி
(அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

**விடை:** தங்கள் நிலம் 'களர் நிலமா? அல்லது உவர் நிலமா?' என்பதை அறிய முதலில் மண் பரிசோதனைச்செய்யவேண்டும். மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனை செய்ய உங்கள் ஊர் நல உதவியாளர் அல்லது உங்கள் ஊராட்சிஒன்றியதுணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் உதவியை நாடலாம்.

மண் பரிசோதனையின் அடிப்படையில் தங்கள் நிலம் களர் என்று முடிவு செய்யப்பட்டால் களர் தன்மையை மாற்றுவதற்

கான முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

களர் நிலங்களில் 'பேராவூரணி-1' (பி.வி.ஆர்.1) என்ற நெல் ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகம், அமில கார நிலை (பிஎச்) 9.0 வரையுள்ள களர் மண்ணிலும், இ.சி. (E.C.) 1.5 வரையுள்ள உவர் மண்ணிலும் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தரக் கூடியது. 'பேராவூரணி-1' ரகத்தின் வயது 145 நாட்கள். இந்த ரகத்தைச் சம்பா பட்டத்தில் (ஜூலை-ஆகஸ்ட்) மாதத்தில் பயிரிட வேண்டும்.

களரில் நெல் பயிரிட கூடுமானவரை அதிகஅளவு தொழு உரம் அல்லது தழை எரு போடுதல் சிறந்தது. இந்த ரகத்திற்கு அடியுரமாக 11 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவில் உரமிட 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 24 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 11 கிலோ மியூரியேட் ஆஃப்பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். களர் நிலங்களுக்குச் சூப்பர் பாஸ்பேட் உரமிடுதல் சிறந்தது.

நடவு செய்த 30-வது நாளில் 3.5 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட 17.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 7.7 கிலோயூரியாவைத் தூவ வேண்டும். அடுத்து, பயிர் சூல் கட்டும் தருணத்தில் 3.5 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட 17.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 7.7 கிலோ யூரியாவை இட வேண்டும்.

களர் நிலத்தில் எப்பொழுதும் தொடர்ந்துத் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. வயலுக்குக் கொஞ்சம் தண்ணீர் மட்டுமே விட்டு, வயலெங்கும் நன்கு பரவி நிற்கச் செய்து, மண் நன்கு நனையுமாறு செய்ய வேண்டும். வயலில் மீண்டும் புதிதாகத் தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு செய்வதால் வயலில் உள்ள தீங்கு விளைவிக்கும் உப்புகள், மேல் மட்ட மண்ணிலிருந்து வேர் மண்டலத்திற்குக் (Root Zone) கீழே சென்று விடும். இதனால் அவ்வுப்புக்களால் பயிர்களுக்கு ஊறு ஏற்படாது.

களர் நிலத்தில்பொதுவாகப் பயிர் கரைந்துவிடும்! எனவே களர் நிலத்தில் நடவு செய்யும் போது ஒவ்வொரு குத்திலும் 3 பயிர் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு ஏக்கர் நடவு செய்ய, 24 கிலோ 'பேராவூரணி-1' விதைகளை 16 செண்ட் நாற்றங்காலில் விதைத்திட வேண்டும்.

களர் நிலத்தில் தக்கைப் பூண்டு விதைத்து, பூ பூக்கும் தருணத்தில் அப்படியே மடக்கி உழுதுவிட வேண்டும்.

''பேராவூரணி-1'' ரக நெல் விதை வேண்டும் என்று உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் முன் கூட்டியே தெரிவித்தால், அவர் அவ்விதைகளை வரவழைத்து வழங்கிட ஆவன செய்வார்.

**வினா :** எங்கள் ஊரில் சுமார் பதினைந்து குடும்பங்கள் வீட்டு மனை சொந்தமாக இல்லாமல் தவிக்கிறார்கள். தமிழக அரசு நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் பட்டா செய்துதருவதை அறிந்து, பல அதிகாரிகளுக்கு மனுக்கள் எழுதியும், இதுவரை அவர்கள் ஒருபயனும் காணவில்லை. எனவே, எங்கள் இளைஞர் மன்றம் முன்னின்று, அந்த ஏழை மக்கள் பயனடைய ஆவன செய்து தர எண்ணியுள்ளது. எங்கள் மன்றம் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும்? எந்தெந்த அதிகாரிகளை எவ்விதம் அணுக வேண்டும்? மனுக்களில் புறம்போக்கு நிலம் காட்டப்பட வேண்டுமா? பட்டா நிலத்தைக் காட்டலாமா? தயவு செய்து பதில் கூறவும்.

—மா. நாராயணன்,
செயலாளர்,
இளைஞர் மன்றம்,
குறிச்சி,
குளித்தலை வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**விடை :** வீடற்றோருக்கு வீட்டு மனையும், நிலமற்றோருக்கு நிலப்பட்டாவும் வழங்குவதில் தமிழ் நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால் சில இடங்களில், இவ்வாறு பட்டா வழங்குவதில் பல தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதம் ஏற்படுகிறது. அத்தகைய காரணங்களால் தான் உங்கள் ஊரிலும் வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகின்றோம். உங்கள் இளைஞர் மன்றம் அவர்களுக்கு மனைப் பட்டா வாங்கிக் கொடுத்திட விரும்பினால், பின் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) வீட்டு மனைஇல்லாதவர்கள் தங்களுக்கு வீட்டு மனை இல்லை என்பதைக் குறிப்பிட்டு முடிந்தால் வீடு கட்டிக் கொள்வதற்கு ஏற்ற புறம்போக்கு நிலத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிட்டு— வீட்டு மனை வழங்குமாறு மனு எழுதி மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்யவேண்டும். இம் மனுக்களை உங்கள் ஊரிலோ அல்லது பக்கத்திலோ 'மனு நீதித் திட்ட நாள்' பணி மேற்கொள்ளும் பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரில் கொடுத்திடுவது சிறந்த்து.

(2) வீட்டுமனை கேட்கும் இடம் ஊராட்சிமன்றத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாய் இருந்தால், அப்புறம்போக்கு நிலத்தில் வீட்டு மனை கேட்டு மனு செய்துள்ளவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு அந் நிலத்தைப் பகிர்ந்து மனைப் பட்டாவாக அளிக்க அந்தஊராட்சிமன்றம் ஒப்புதல் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி, தீர்மான நகலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஊராட்சி மன்றம் முக்கிய காரணம் காட்டி, ஊராட்சிப் புறம்போக்கு நிலத்தை வீட்டு மனையாகக் கொடுப்பதை ஆட்சேபிக்கலாம். இவ்வாறு நேர்ந்திடாமல் இருக்க, ஊராட்சித் தலைவரையும், உறுப்பினர்களையும் கலந்து, வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு ஒருமுகமான ஒப்புதல் அளித்துத் தீர்மானம் நிறைவேற்றிட இளைஞர் மன்றம் முயற்சிக்கலாம். அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமெனில் ஊராட்சி மன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனு செய்துள்ளவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கும்படி கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றி மேற்கூறிய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

(3) இளைஞர் மன்றத்தின் சார்பில் வீடில்லாதவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும்

படி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுக்கலாம். முடிந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரையோ அல்லது கோட்டாட்சித் தலைவரையோ நேரில் சந்தித்து, வீட்டு மனை கேட்டு மனு அனுப்பியவர்களுக்கு, மனைப் பட்டா வழங்கும்படி இளைஞர் மன்றத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளலாம்.

(4) வீட்டு மனைப் பட்டா அளிப்பதில் எங்காவது முறைகேடு நடப்பின், தொடர்புடைய மேல் அலுவலர்களைச் சந்தித்து முறையிடலாம்.

(5) வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் கிராம கர்ணம், நிலவரி ஆய்வாளர், துணை வட்டாட்சியாளர், வட்டாட்சியாளர் ஆகியோர் நேரடியாக ஈடுபட வேண்டியுள்ளது. அவர்களுடன் சுமுகமான முறையில் பழகி, வீட்டுமனைப் பட்டா விரைந்து கிடைத்திட முயற்சிக்கலாம்.

நீங்கள் தொண்டுமனப்பான்மையுடன் பணியாற்றினால், அலுவலர்கள் நிச்சயமாக உங்களுக்கு உதவிட முன் வருவார்கள்.

வீட்டுமனைப் பட்டா பெற புறம்போக்கு நிலங்களையே காட்ட வேண்டும். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் புறம்போக்கு நிலம் இல்லாவிட்டால் பட்டா நிலங்களை வாங்கி, வீட்டு மனையாகப் பிரித்துப் பட்டா செய்து வழங்கப்படுகிறது.

வினா : உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவன் படிப்புத் தரத்தில் சிறந்து விளங்குகின்றான். ஆனால் அவனது குடும்பத்தில் அவனைச் சீரிய முறையில் படிக்கவைக்க வசதியில்லை. மாணவன் 9-ஆம் வகுப்பு படிக்கிறான். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவன். பிற்பட்டோர் நலத் துறையில் அவனுக்கு எப்படி எந்த விதமான முறையில் உதவி அல்லது கடனுதவி அளிக்கப்படுகிறது? பிற்பட்டோர் நல அலுவலகம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் எங்கு உள்ளது எனத் தெரிவிக்கவும்.

—திருவேங்கடப் பெருமாள்,
பொய்கைமேட்டூர் (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை : பிற்பட்டோர் நலத் துறை மூலம், பிற்பட்ட மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகையும், பிற்பட்டோர் நலத் துறை விடுதிகளில் (Hostels) இலவசமாகத் தங்கி, இலவசமாக உண்டு, படித்திடுவதற்கான வசதியும் அளிக்கப்படுகிறது. நன்கு படிக்கும் ஏழை எளிய பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இவ்வுதவிகள் கல்லூரி படிப்பு முடியும் வரை தொடர்ந்து கிடைக்க வாய்ப்பு உள்ளது.

அண்மையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்பட்டோர் நலப்பணிகளைக் கவனிப்பதற்கு எனவே தனி நல அலுவலர்கள் (Welfare Officers) நியமிக்கப்பட்டுள்ளார்கள். (முன்பு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் நல அலுவலரே, பிற்பட்டோர் நலப் பணிகளையும் கவனித்து வந்தார்). வேலூரில், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே, மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் அலுவலகமும் (District Backward Class Welfare Officer) உள்ளது. அங்கு சென்று மேலும் இது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.


## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**
(Ex. Member of the British Society of Dowers, London)
நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்-6.
தொலைபேசி எண் 31912.


## குறுவைச் சிறப்பிதழுக்குப் பாராட்டு



‘‘தமிழரசு’’ இதழின் ஐந்தாவது ஆண்டு அடியெடுத்து வைக்கும் ஆரம்பத்தில் குறுவை மாறு வாரிச் சிறப்பிதழ் என் போன்ற விவசாயிகள் குறுவை, கார், நவரை ஆகிய பட்டங்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டோம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ‘குன்றென மகசூல் குவிக்க குறுவைப் பட்டமே சிறந்தது!’ என்ற பகுதியில் சூரிய ஒளியைப் பற்றி கூறியதுபோல், ஐ.ஆர். 8, ஆடுதுறை—1, கரிகாலன் கார் பட்டத்தில் மேனி இருப்பதுபோல் பிந்திய பட்டத்தில் இல்லை. அதுபோல் சோளம், நிலக்கடலை, மிளகாய் ஆகிய பயிர்களும் இருக்கின்றன. காய்கறிகளும், பூச்செடியும் அதிக மகசூல் காண்கிறது. 1—7—’74 இதழ் ஒவ்வொரு விவசாயிகளும் பலமுறை படித்து பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு.மு. முகைதீன் பிச்சை,
உழவர் விவாதக் குழு,
செங்கோட்டை.



உளனமுற்றோர்க்கு உதவிட உன்னதமான வழி!
செலவு ஒரு ரூபாய்
Rs. 1000,000
வரவோ பல லட்ச ரூபாய்
முதலமைச்சரின்
"உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக"
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
மாபெரும் சிறப்புக் குலுக்கல்!
இதுவரை கண்டிராத ஏராளப் பரிசுகள்! உயர்வான தொகை பெற
உங்கள் நல்வாய்ப்பு இன்றே!
முதல் பரிசு
இரண்டாவது பரிசு
சிறப்புப் பரிசுகள் (எல்லா வரிசைகளுக்கும் பொது)
ரூ. 10 லட்சம் ரூ. 2 லட்சம்
மொத்தப் பரிசுகள் 12312 (10 வரிசைகள்)
முதல் பரிசு
ஒவ்வொரு வரிசைக்கும்
ரூ. 1 லட்சம்
மற்றும்
ஆயிரக்கணக்கான
கவர்ச்சிப் பரிசுகள்.
மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 35 லட்சம்
இன்றே வாங்குங்கள்
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்!
குலுக்கல் நாள்
28-9-'74
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-600009.